வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
[P]andit M. Duraiswami Aiyangar,
Ayurveda Bhushan.

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol. 1. | ப்ரமாதீச ௵ தை ௴ —FEBRUARY—1914. | ஸஞ்சிகை 6. No. 6.

CASE ILLUSTRATIVE OF [DI]SORDERS DUE TO WORMS.

வயிற்றுக் கிருமிகளாலுண்டாகும் கோளாறுகளைப்பற்றி ஒரு திருஷ்டாந்தம்.

BY

C. KRISHNA REDDI, B.A, M. B. & C. M,
Physician & Surgeon.

ஐந்து வயதுள்ள பெண் குழந்தை ஒன்று என்னிடம் சிகிச்சைக்காகக் கொண்டு வரப்பட்டது. அதன் தேஹத்திலுண்டான கோளாறுகளைப்பற்றி பரீக்ஷை செய்ததில் அறியப்பட்ட விஷயங்களை அடியில் விளங்கக் கூறுகிறேன்:—

ரோகத்தின் வரலாறு:—நாலு வயது வரையில் குழந்தை சௌக்கியமாயிருந்தது; குழந்தை திடகாத்திரமாகவும் காணப்பட்டது. ஓடி விளையாடிக்கொண்டும் பேசிக்கொண்டுமிருந்தது. எவ்விதமான ரோகக்குறியும் அதுவரையிலும் உண்டானதில்லை.

பிறகு, இப்பொழுது ஒரு வருஷகாலமாகக் குழந்தைக்கு ஏதேதோ அசௌக்கியம் நேரிடத் துவக்கிற்று. ஒரு வருஷத்திற்கு முன் ஜ்வரம் வந்தது. ஆனால், ஜ்வரம் எத்தனை நாள் அடித்ததோ, எவ்வித ஜ்வரமோ அதன் விவரம் இன்னதென்று அக்குழந்தையின் தாய் தந்தையர்களால் சொல்லக்கூடவில்லை. அந்த ஜ்வரம் வந்த சில நாட்கள் கழித்து (இத்தனை நாள் கழித்து என்று நிர்த்தாரணமில்லை) ஆஹாரம் சாப்பிடும்பொழுது குழந்தையின் கைகள் வளைந்து இசிவு கண்டது. அதற்காக தெய்வங்களைக்குறித்துப் பிரார்த்தனை செய்துகொண்டதில் சிறிது குணம் காணப்பட்டதாம். ஆனால், கிரமக் கிரமமாக வியாதியானது பலப்பட்டு அடியில் குறிக்கப்படும் நிலைமைக்கு வந்தது:—

சிகிச்சைக்கு என்னிடம் வந்த ஸமயத்தில் குழந்தையின் தேஹஸ்திதி என்னவென்றால்—அதற்குப் பேசமுடியவில்லை, அதாவது வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வராது. நிற்பதற்கு சக்தியில்லை. மேலும் இடுப்பில் வலிவில்லை. கால்கள் மிகவும் மெலிந்துபோய் சக்தியற்றவைகளாயிருந்தன. ஒரு பக்கத்து முழங்கால் (Knee-jerk) பெரிதாக மேலுக்கு வந்தும், மற்றொரு பக்கத்தது குறைந்தும் காணப்பட்டன. முகமானது சதை பெருத்தும் பொலிவுடன் கூடியதாகவும்மட்டும் காணப்பட்டது. ஆனால், முகத்தில் விகாரமான வெண்ணிறம் கிடையாது. ஆகிலும் பட்டினி கிடந்ததற்கேற்ற சோர்வு விசேஷித்திருந்ததுடன் வேறு சில விசித்திரக் குறிகளும் இருந்தன. கண்

ணில் கருவிழியின் மீது ஒருவித வெண்ணிறமான குறியிருப்பதுபோல் தெரியவந்தது. நேராக மனிதரைப் பார்க்காது. எதிரில் இருப்பவரைப் பார்க்கவேண்டுமானால் தலை குனிந்து கண்களை மேலே விழித்துப்பார்க்கும். நாக்கை முன்னுக்குக் கொண்டுவந்து அசைக்க முடியாது. அப்படியல்ல, நன்றாக நாக்கை நீட்டென்று வற்புறுத்தினால், பிரயாஸப்பட்டு முகத்தையெல்லாம் சுடித்துக்கொண்டு வெகு வருத்தப்படும். அவ்விதம் வருத்தப்படுகையில் சிறிது வலிவந்ததுபோல் முகத்தை இடது பக்கமாக இழுத்துக்கொண்டு போகும். கண்களை மூடிக்கொள் என்று சொன்னால், இடது கண்ணை மூடிக்கொள்ளுமேயன்றி வலது கண்ணை மூடிக்கொள்ள முடியாது. நிர்பந்தப்படுத்தி இரண்டு கண்களையும் கெட்டியாக மூடிக்கொள் என்றால், அப்பொழுது இடது கண்ணை கெட்டியாக மூடிக்கொண்டு வலது கண்ணை சிறிது மூடியதும் மூடாததுமாக வைத்துக்கொள்ளும். முகத்தை அடிக்கடி ஒரு பக்கமாக இழுத்துக்கொண்டு போகும். "அர்திதப்" (Facial paralysis) என்கிற பார்ச்வ வாயுவின் குறிகள் அனைத்தும் இருந்தன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, அவ்வியாதியின் தத்துவம் இன்னதென்று தீர்மானம் செய்துகொண்டேன். பிறகு, அக்குழந்தைக்கு நான் அடியில் குறிப்பிடும் மருந்தைக் கொடுத்தேன். அதாவது:—

ஸாண்டோனின் (Santonin) க்ரைன் 4.

ரஸகர்ப்பூரம்-சுத்தம் (Calomel) க்ரைன் ½

இவ்விரண்டையும் ஒன்றாகக் கலந்து இரண்டு பொட்டலமாகக் கட்டி, இரவில் படுக்கப் போகும் ஸமயத்தில் ஒரு பொட்டலமும், விடியற் காலத்தில் 4-மணிக்கு ஒன்றும் கொடுக்கச் சொல்லி, பிறகு காலை 6 மணிக்கு ஆமணக்கெண்ணெய் இரண்டு அவுன்ஸ் போட்டுப்படி யாகவும் செய்தேன். இவ்விதமே அவர்கள் செய்ததில், முதல் நாள் குழந்தையின் வயிற்றிலிருந்து 57-நாகப்பூச்சிகள் விழுந்தன. மறுபடி, தினம் மாற்றி தினம் அதேவிதம் செய்து வரச் சொன்னேன். மொத்தம் அக்குழந்தையின் வயிற்றிலிருந்து 120 புழுக்கள் வெளிவந்தன. பிறகு கிரமக்கிரமமாய் குழந்தை ஸௌக்கியமடைந்து வந்தது.

WHERE TO SEND THE TUBERCULOUS?

க்ஷயரோகிகளை அனுப்புவதற்கேற்ற இடம் எது? *

By

Dr. J. L. CHANDRA, L. M. & S.,

Physician & Surgeon.

க்ஷய ரோகிகளுக்கு ஆரோக்கியத்தை விருத்தி செய்யவேண்டுமானால், அவர்களை, நல்ல காற்றோட்டமில்லாத குறைகளுக்கு ஸமானமானப் பிரதேசங்களிலிருந்து சுத்தமான காற்றுலாவும் வெளிப்புறங்களில் இருக்கச் செய்வதற்காக (for "open air treatment") வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று இக்காலத்திய வைத்தியர்கள் சொல்வது வாடிக்கையாயிருக்கிறது. சிறந்த வெளிப் பிரதேசங்கள், மலைகள், பாலைவனம், கடல், கடற்கரை முதலிய இடங்களில் வெகு சுத்தமான வாயு விசேஷமாக எப்பொழுதுமுண்டு. பூமியில் நீர்க்கசிவுகளில்லாத விசாலமானப் பிரதேசங்கள், மிகவும் சுத்தமான ஜலம் இவை க்ஷயரோகிகளுக்கு இன்றியமையாதவை. மிதமாக உயர்ந்துள்ள ஆல்மோரா, நீலகிரி முதலிய பர்வதப் பிரதேசங்கள் இப்பிணியாளிகள் வசிப்பதற்கு எவ்விதத்திலும் ஏற்றவையென்று ஏனது அனுபவத்தைக் கொண்டு நான் அறிந்திருக்கிறேன். காலை

---

* இவ்வியாஸம் 'இண்டியன் மெடிகல் ரிகார்டு' என்பதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

வேலையில் குளிர்ச்சி பொருந்தியதும் ஆனந்த மளிக்கக் கூடியதும் இயற்கையிற் பிறந்த இரஸாயனம் எனத் தகுந்ததுமான மந்தமாருதமும், மலைகளில் மிகுதியாகக் கிடைக்கக்கூடியதான பிராணவாயுவின் (oxygen) சாரமும் மனிதனுடைய உயிர்வாழ்க்கையை முற்றிலும் புதுப்பிக்கும் இயல்புடைய அரும் பொருட்களாம். ஆனால் மிகவும் உன்னதமான பர்வதங்களும், அதிகமாகப் பனிச்சாரலுள்ள இடங்களும் இவர்களுக்கு நேர் விரோதமாக சேதம் விளைவிக்கக் கூடியவை. கால தேசங்களினால் திடீரென்று நேரிடும் இவ்வித எதிர்த்தாக்கலை வங்காளி முதலிய சில தேசத்தார் தாங்கக் கூடியவ ரல்லர்.

பாலை வனங்களிலுள்ள ஆகாயத்தில் பிராணவாயு மிகுதியாக வியாபித்திருக்கின்றதென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால், க்ஷயரோகிகளுடைய ச்வாஸாசயமும் ச்வாஸமார்க்கமும் ஏற்கனவே அழற்சியினால் விகாரமடைந்திருக்குமாகையால், அவ்வவயவங்களுக்குள் பாலைவனங்களில் பறந்துகொண்டிருக்கும் நுண்ணிய மணற்பொடிகள் ச்வாஸத்துடன் இராப்பகலாய் உறிஞ்சப்பட்டு, நோய்கொண்ட ச்வாஸாசயங்கள் அவற்றால் இன்னும் அதிகமாக அழன்று போகும். நான் இராஜபுதனம், ஸிந்து தேசத்திலுள்ள ஹைதராபாத் இவ்விடங்களில் போய் வஸித்திருக்கிறேன். (அத்தேசங்களில் பாலைவனம் விசேஷம் என்று அனைவரும் அறிந்திருக்கலாம்.) அவ்விடங்களில் க்ஷயரோகம் அதிகமாயிருப்பதைப் பார்த்தேன். ஸமுத்திரமும், ஸமுத்திரக் கரைகளும் இப்பிணியாளிகளுக்கு ச்லாக்கியமானவையென்று தற்காலத்திய வைத்தியர்கள் பொதுவாக அபிப்பிராயப்பட்டபோதிலும், என்னுடைய அனுபவத்தில் அப்பிரதேசங்கள் வெகு தீங்கு செய்யக் கூடியவையென்றே தெரியவருகிறது. அவ்விடங்க[illegible]த்த க்ஷயரோகிகளில் பத்துக்கு ஒன்பதுபெயர் நாளுக்குநாள் க்ஷீணஸ்திதியடைந்து வந்ததாக நான் கண்டறிந்தேன். பற்பல இடங்களிலுள்ள கடலோரங்களில் நான் பலமுறை வஸிக்க வேண்டி வந்தது. அவ்விடங்களில் என்னிடம் வந்த க்ஷயரோகிகள் நெருப்பிலிட்ட நெல்லுகளைப்போல் பொரிந்து கொண்டிருப்பதாகக் கண்டேன். இதற்குக் காரணம் இன்னதென்று கஷ்டப்பட்டுத் தேடவேண்டியதாயில்லை. கடலோரங்களிலிருக்கும் ஜனங்களுக்கு சர்மத்தைப்பற்றிய வியாதிகள் வெகு விசேஷமாக உண்டாகக் கூடியவையென்பதும், சொறி சிரங்குகள் ஸமுத்திரக் கரைகளில் வஸிப்பதால் சீக்கிரம் குணமாவதில்லையென்பதும் அனைவராலும் நன்கு அறியப்பட்ட விஷயமே. ஸமுத்திரத்திலுள்ள உப்புகள் அணுரூபமாக ஆகாயத்தில் பரவி, ஸமீபத்திலிருப்பவர்களுடைய தேஹ விரணங்களை அதிகப்படுத்துகின்றன. இது உண்மையான தத்துவமாயிருந்த போதிலும், பெரும்பான்மையோர் இதை நம்பக்கூடாத விஷயமாகவே நினைப்பார்கள். ஏனெனில், தற்காலத்திய வைத்தியர்கள் உப்பு நீரைக்கொண்டு (Saline solution) சிதைந்துள்ள விரணங்களை சுத்தம் செய்வதற்காகக் கழுவுகின்றனர்.

அவர்கள் இவ்விதம் செய்து வந்த போதிலும் நியாயமான காரணத்தைக் கவனிப்போமானால், உப்புப்பொடிகள் விரணங்களுக்குள் தங்கி எரிச்சலை யுண்டுபண்ணிக் கொண்டே அவற்றை அதிகப்படுத்துமென்றே சொல்ல வேண்டும். கடலோரங்களில் ஸமுத்திர நீரிலுள்ள உப்புகள் வாயுவின் வேகத்தினால் ஆகாயத்தில் வெகு நுண்ணிய பொடிகளாகப் பரவியிருப்பதால், அவை க்ஷயரோகிகளுடைய ச்வாஸாசயங்களுக்குள் ச்வாஸத்துடன் இழுக்கப்பட்டு உட்சென்று அவ்வவயவங்களிலுள்ள விரணங்களில் அதிக அழற்சியை யுண்டு பண்

னுகின்றன. உண்மையில் எனது அனுபவத்திற்கு வந்த விஷயத்தை நான் வெளியிட்டேன். இதைப்பற்றி எனது வைத்திய ஸஹோதரர்களின் அனுபவமும் அபிப்பிராயமும் எவ்விதமென்று அறிய விரும்புகிறேன்.

CARE OF PREGNANCY.

கர்ப்பிணிகளைப் பரிபாலித்தல்.

BY

Dr. C. V. CHETTY.

"நமது வீட்டில் ஒரு கர்ப்பிணியுண்டு. அவளுக்கு ஆஹாரம் முதலியவற்றில் பத்தியம் ஏதேனும் உண்டா? அல்லது வலிவு வருவதற்காக ஏதாவது ஔஷதம் (Tonics) கொடுக்க வேண்டுமா?" என்று பலர் வைத்தியரை அநேகமுறைக் கேட்பதுண்டு.

மனிதர் புத்திவைசாலியமுள்ள பிராணிகள். புத்தி விசாலமாய் அமைந்திருப்பதாலேயே அநேக விதமான ஸந்தேஹங்களும் கவலைகளும் உண்டாகின்றன. ஏதேனும் ஒரு விஷயம் புதிதாக ஏற்பட்டால், மனிதருடைய மனதில் ஒருவித கலக்கம் உண்டாகின்றது. வீட்டில் ஒரு பெண் கர்ப்பம் தரித்தால், உடனே சிறிது பயத்தினாலேயோ, அல்லது ஸந்தோஷத்தினாலேயோ, அல்லது வேறு எக்காரணத்தினாலேயோ கவலை மேலிட்டு வைத்தியரிடம் சென்று அவர்களை ஏதேதோ கேள்விகள் கேட்டு, அவர்களிடமிருந்து திருப்திகரமான பதில்கள் வரும்வரையில் மனது தெளிவு பெறுவதில்லை. அவர்கள் அனைவரும் அறிவதற்காக அடியில் சில விஷயங்களைக் கூறுகின்றேன்.

கருத் தரிப்பதானது இயற்கைக்கு விரோதமான ஒரு விசேஷமல்ல. அது அநாரோக்கியக் குறியல்ல. அதைப்பற்றி கவலைப்படவேண்டிய அவசியமில்லை. ஆரோக்கிய நிலைமையிலுள்ள ஒவ்வொரு பிராணிகளிலும் ஸ்த்ரீ ஜாதிகள், கர்ப்பம் தரிப்பதென்னும் ஒரு தசையையடைவது ஸஹஜமே. மனிதரைத் தவிர்த்து மற்றப் பிராணி கோடிகள், அவற்றில் கர்ப்பம் தரித்த ஜந்துக்களுக்கு ஏதேனும் சிகித்சை செய்கின்றனவா? அவ்வ ஸுகமாகப் பிரஸவித்துத் தாயும் குட்டியுமாய் விருத்தியாகவில்லையா? இதர ஜந்துக்களுக்கு கர்ப்பகாலத்தில் சிகித்சை அநாவசியகமாயிருக்க, மனித ஜாதிக்கு மட்டும் சிகித்சை அவசியமா? அவசியமே அல்ல.

ஆகிலும் மனிதர், இதர ஜந்துக்களைப்போல் இயற்கையான நிலைமையிலேயே இருக்கக் கூடியவரல்லர். இவர்களுக்குள்ள நாகரிகமென்ன, இவர்களுடைய ஆடையாபரணங்களென்ன, இவரது ஆஹார விஹாரங்களென்ன இவைகளெல்லாம் சேர்ந்து இவர்களுடைய ஜீவிதத்தைச் சிறிது கிருத்ரிமமாகச் செய்கின்றன. ஆகையினால் கர்ப்பிணிகள் கொஞ்சம் முன் ஜாக்கிரதையோடிருப்பது நலம்.

ஸாதாரணமான ஆஹார விஹாரங்களின் மூலமாகவே கர்ப்பிணிகள் ஆரோக்கியக்குறைவடையாமலிருந்தால் வேறு விதமாக விசேஷ ஜாக்கிரதையெடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. கர்ப்பிணிக்கு ஆஹாரம் சிறிது அதிகமாய் வேண்டியிருக்கும். இதற்குக் காரணம் அனைவருக்கும் தெரிந்ததே. இந்த ஆஹாரம் முடியவும் எளிதில் ஜீர்ணமாகக் கூடியதாயிருக்கவேண்டும். மேலும் நன்கு போஷணையைத் தரத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். இவர்களுடைய தேஹத்திற்குச் சிறிது பரிச்ரமம் (வேலை செய்தல்) அவசியம், ஆகிலும் அது மிதமாக இருக்கவேண்டும். தேஹபரிச்ரமம் இல்லாதவர்களுக்கு பலயீனமுண்டாய், பிரஸவ காலத்தில் அவர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டிவரும். கர்ப்பிணியாயிருக்கும்பொழுது தேஹபரிச்ரமம் செய்து வருபவர் ஸாதாரணமாய் ஸுகமாகப் பிரஸவிக்கின்றனர். இக்காரணத்தினாலேயே செல்வவான்களுடைய பெண்

ளை விட ஏழை வீட்டுப் பெண்கள் பெரும் ாலும் ஸுகப்பிரஸவம் பெறுகிருர்கள். ஏழை ள் கர்ப்பிணிகளாயிருந்தாலும் வேலை செய்யா லிருக்கத் தீராது. செல்வ வான்களோ! கர்ப் ணியை உட்காரவைத்து, ஆஹாரம் முதலிய ற்றையும் உட்கார்ந்திருக்குமிடத்திலேயே கொண்டு வந்து கொடுத்து, அசைந்தால் கர்ப் ிணிக்கு என்ன ஆபத்து உண்டாகுமோ யெ ன்று அஞ்சி, உடம்பு அசையாமல் காலங்கழிக் குமாறு செய்து வருகின்றனர். இதனுல் இவர் ளுக்கு பலம் குன்றிப்போய் பிரஸவிப்பது வெகு கஷ்டமாகப் போவதுடன், கர்ப்பத்தி லுள்ள சிசுவும் பலஹீனப்பட்டு, பிரஸ வகாலத் தில் அனேக விதமான பிராணுபாயங்கள் நேரி டுகின்றன.

தேஹப்பயிற்சியுடன் சுத்தமான வாயுவும் இருக்கவேண்டும். இதற்காக கர்ப்பிணிகளை ஸாயங்கால வேளையில் வீட்டுக்கு வெளிப்புறங் களிலுள்ள இடங்களுக்கு அழைத்துக்கொ ண்டு போக வேண்டும். மிகவும் ஏழையாயிருப் பவர்களும் இவ்விதம் செய்யவேண்டுமென்று நாம் சொல்லவில்லை. ஏழைகள் ஸாயங்கால வேளையில் மட்டுமல்ல, இதர ஸமயங்களி லும் தமது ஊழியங்களைச் செலுத்துவதற் காக வெளியில் அதிகமாய்த் திரிகிறவர்கள். ஆகையினுல் அவர்கள் சுத்தவாயுவை விசே ஷமாகப் பெறுகிருர்கள். அதிக செல்வ வான்களா யிருப்பவருடைய பெண்டுகளுக்கு இவ்விஷயத்தில் இக்காலத்தில் அதிக கஷ்ட மொன்றுமில்லை. அவர்கள் தம் தமது வண்டிக ளில் ஏறிக்கொண்டு, ஸாயங்காலங்களில் வெளி யில் தோட்டங்களுக்கும், ஸமுத்திரக் கரைக்ளு க்கும், மற்றும் நல்ல காற்ருேட்டமுள்ள இடங் களுக்கும் யதேச்சையாய் சென்று வருகிருர் கள். கஷ்டமெல்லாம் அதிக தனவான்களுமல் லாமல் கேவலம் ஏழைகளாகவுமில்லாமல் நடுத் தர நிலைமையிலிருப்பவர்களுக்கே. ஆரோக்கி

யத்தைக்கோருபவராஞல் கஷ்டப்பட்டு இடை யூறுகளைக் கூடியமட்டிலும் விலக்கிக் கொண்டு மிகவும் சுத்தமான வாயுவை சுவாஸிக்கும் வழி களை அவசியம் தேடிக்கொள்ள வேண்டும்.

தேஹபரிச்ரமம் அவசியமென்ருலும் கஷ்ட ஸாத்தியமான காரியங்களைச் செய்யக்கூடாது. கஷ்டமில்லாத வீட்டுக்காரியங்களை செய்துவர வேண்டும். வீட்டில் அனைவருக்கும் அன்னம் பரிமாறுவது முதலிய ஸுலபமான காரியங் களைச் செய்யலாம். அரிசி முதலியதைக் குத்து வது போன்ற கடினமான காரியங்கள் நல்ல தல்ல. ஜலம் நிரம்பிய குடம் முதலான அதிக பாரங்களைச் சுமக்கக் கூடாது. அதிகமாய் முக் கக்கூடாது. மலை முதலிய உன்னதப் பிரதே சங்களின்மேல் ஏறக்கூடாது. குதிரை யேற்றம் முதலியவை அபாயகரமானவை.

கர்ப்பிணிகளுக்கு பயமுண்டாக்கக் கூடாது. அவர்களுக்கு மனக்கலக்கம் உண்டாவது பிசகு. அவர்களுக்கு மனவருத்தமாவது துயர மாவது உண்டாகாமலிருக்க வேண்டும். அவர்க ளுடைய மனதில் எவ்விதமான சிந்தையாவது ஏக்கமாவது உண்டாகக் கூடாது.

அவர்களுக்கு மலச்சிக்கல் உண்டாகாமலிரு க்குமாறு கவனித்து வரவேண்டும். மலத்தைக் கழிப்பதற்கு ஏற்பட்டுள்ள விரேசன ஔஷதங் கள் அவர்களுக்குக் கொடுக்கத் தகுந்தவை யல்ல. விரேசனம் அல்லது பேதியாவதற்கு ஔஷதங்களைக்கொடுப்பது அபாயகரமானது. அவசியம் மலங்கழிவதற்கென்று ஔஷதம் கொடுக்க வேண்டியிருந்தால் வைத்தியர்களைக் கொண்டுதான் கொடுக்கவேணும்.

வழக்க மெப்படியோ அவ்விதமே ஸ்நானம் செய்து வரவேண்டும். எல்லா அவயவங்களையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மருந்துகளடிக்கும் பீச்சாங்குழல்களைக் கொ ண்டு கர்ப்பாசயத்தினுள் தண்ணீர் அடித்துக் கொள்வது (Vaginal Injection) சரியல்ல. கர்ப்

பாசய ஸம்பந்தமான அழுக்குகள் ஏதாவது துணிகளிற் பற்றிக்கொள்வதாகத் தெரிந்தால், அவ்வித அநாரோக்கிய நிலைமையில்தான் பிச்சாங்குழல் வேண்டியிருக்கும். அப்பிச்சாங் குழலில் ஜலத்தை மிகவும் சூடாகச் சேர்த்து உபயோகிக்கக்கூடாது. மிகவும் குளிர்ந்த நீரும் தகாது. பிச்சாங்குழலைக் கொண்டு மெதுவாகவே தண்ணீரைக் கர்ப்பாசயத்தினுள் அடிக்கவேண்டும். வெகு வேகமாக ஜலத்தை அடிப்பது அபாயகரமானது.

கருத்தரித்திருக்கையில் புணர்ச்சி அடியோடு கூடாதென்று சொல்லுவதற்கில்லை. பொதுவாக புணர்ச்சி அப்பொழுது உசிதமானதல்ல. கர்ப்பங்கள் கரைந்து போவதற்குப் புணர்ச்சியும் ஒரு காரணமாம். முதல் நான்கு மாதம் வரையில் அவ்விஷயத்தில் மிகவும் மிதமாயிருப்பது நலம். இதற்கு முன் கர்ப்பம் கரைந்திருந்தால், அப்படிப்பட்டவர்கள் புணர்ச்சியை அடியோடு விலக்கவேண்டும்.

அதிக கனமான வஸ்திரங்களை உடுக்கக் கூடாது. வஸ்திரத்தை அதிகமாய் இழுத்துக் கட்டுவது பிசகு. ஒட்டியாணம் முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது. கொஞ்சம் மெல்லிய தேகமுள்ளவர்களுக்குச்சில ஸமயத்தில் வயிறு ஸாதாரணமான கர்ப்பிணிகளுடையவயிற்றைக் காட்டிலும் பெரியதாகக்காணக்கூடும். இவ்விதமிருந்தால், வயிற்றின்மேல் ஒரு மிருதுவான பட்டையைக் கட்டிக்கொண்டிருந்தால் அது பிரஸவ காலத்திலுண்டாகும் சில கஷ்டங்களை விலக்கிக்கொள்ள ஹேதுவாகும். முன்புறத்தில் வந்து சாய்ந்திருக்கும் வயிற்றை ஒரு அகன்ற பட்டையைக்கொண்டு கட்டவேண்டியது அவசியம். அதிகமாய் இழுத்துக் கட்டுவதால் கெடுதி யுண்டாகக்கூடும். மிகவும் தளர்ச்சியாகக் கட்டுவதிலும் இலாபமில்லை. முதலில் ஒரு தடவை படித்தறிந்த மருத்துவச்சியைக்கொண்டு கட்டச்சொல்லி, அவளிடமிருந்து முதன் முதல் தெரிந்துகொண்டு, பிறகு வேண்டுமானால் கர்ப்பிணியானவள் தானாகவே பட்டையைக் கட்டிக்கொள்ளலாம். இரவிக்கைகளையும் அதிக அழுத்தமாகக் கட்டக்கூடாது. அழுத்தமாகக் கட்டினால் பிறகு குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்குத் தகுந்தவாறு மார்பும் பெருக்காமற் போய்விடும். மிகவும் சிறுத்துப்போயிருக்கும் ஸ்தனங்களின்மே பிராந்தியும் ஜலமும் ஸமமாகக் கலந் தடவிவந்தால் பிரயோஜனமுண்டு. ஸ்தனங்களின்மேல் ஏதாவது புண்களிருந்தால் அவற்றை நன்றாகக் கழுவவேண்டும்.

கர்ப்பம் தரித்திருக்கும்காலங்களில் சிலசிறிய வியாதிகள் உற்பத்தியாவதுண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு தைரியம் சொல்லி, பொறுத்துக்கொண்டு ரோகத்தில் கவனம் செலுத்தாமலிருக்கச் செய்து, மருந்துகள் கெடுதி செய்யக்கூடியவை யென்று அவற்றைக் கூடிய வரையிலும் விலக்கி, உத்ஸாஹத்தை விருத்தி செய்து கொண்டே ஔஷதங்கள் உபயோகிக்காமல் இருக்கவேண்டிய வழிகளைத் தேடி அன்னபானாதிகளைக் கொண்டே சிறிய ரோகங்களைத் தடுக்கவேண்டும்.

ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது கர்ப்பிணியினுடையமூத்திரத்தை வைத்தியர்களைக் கொண்டு பரிசோதிக்கச் செய்யவேண்டும். அவ்வித பரிசோதனைகளால் மூத்திரத்திலுள்ள தோஷங்களைத் தெரிந்து கொண்டு, முன் ஜாக்கிரதையுடன் அப்போதைக்கப்போது உண்டாகும் ரோகங்களுக்குத் தகுந்த சிகித்ஸை செய்து கொண்டுவந்தால், பிரஸவகாலத்தில் தாய்க்கும் குழந்தைக்கும் நேரிடக்கூடிய அனேக பிராணாபாயங்களை விலக்கிவிடலாம். கடைசியில் இரண்டுமாதங்களிலும் ஒரு மாதத்திற்கு இரண்டு மூன்று தடவைகூட மூத்திரத்தைப் பரீக்ஷித்து வருவது நலம். இந்த மாதங்களில் புணர்ச்சி யென்பதே கூடாது.

கர்ப்பிணிகளுக்கு மலபந்தம் சிறிதும் உண்டாகக்கூடாது. மலபந்தமுடையவர் இரவில் படுக்கப்போகும் பொழுது சிறிதளவு சிற்றாமணக்கெண்ணெயை உட்கொண்டுவரலாம். பிரஸவகாலத்தில் மலச்சிக்கலால் பிரஸவம் ஒருவாறு தடைபடக்கூடும். பிரஸவிப்பதற்குச் சில நாள் முன்னதாகவே வயிற்றில் மலங்கள் சிக்கிக்கொள்ளாமல் அப்போதைக்கப்போது வயிறு சுத்தமாயிருக்கும்படி தகுந்த முயற்சியெடுத்துக்கொள்வது நலம். கர்ப்பிணிகளுக்கு விசேஷமான ரோகங்களோ வேறு கஷ்டமோ உண்டாகும் ஸமயங்களில் வைத்தியர்களால் செய்யக்கூடிய சிகித்ஸா முறைகள் அல்லது உபாயங்களைப்பற்றி மற்றொரு முறை கூறுவோம்.

MIND MEASUREMENT.

மனதை அளத்தல்.

By

SRI TRIVIKRAMA SARMA, B. A.

(மார்கழி மாதத்தில் வெளியானதின் தொடர்ச்சி.)

அடியில் கூறப்படுவது இதற்கு ஒரு திருஷ்டாந்தமாகும்:—நமது கண்களில் ஒரு கொசு விழுந்தால் அப்பொழுது என்ன ஸம்பவிக்கிறது? அந்த க்ஷணமே அவ்விதம் கொசு கண்களில் விழுந்த விஷயமானது, கண்களிலிருந்து உணர்ச்சி நரம்புகளின் மூலமாய் மூளையை அடைகிறது; அதாவது மூளை அவ்விஷயத்தை உடனே அறிகிறது. மூளைக்கு அவ்விஷயம் எட்டின க்ஷணமே மூளையினால், வேலையைச் செலுத்தும் நரம்புகளின் மூலமாய் (Motor nerves) கண்களிலுள்ள தசை நார் முதலியவை தூண்டப்பட்டு ரெப்பைகள் மூடப்படுவதுடன், கண்களில் விழுந்த அழுக்கு முதலானவற்றை வெளிப்படுத்தும்படி கண்ணீரும் உண்டாக்கப்படுகிறது. இவ்விதமாக காரியம் நடந்தேறுகிற விஷயங்களைப் பற்றி நாம் மனதில் இவ்விவ்விதம் செய்ய வேண்டுமென்று யோசனை செய்யாவிட்டாலும், உணர்ச்சி நரம்பு முதலியவைகள் நமக்கும் தெரியாமலே இயற்கையாகவே இவ்வித காரியங்களை நடத்துகின்றன. இது மிகவும் சொற்பமான திருஷ்டாந்தம். பசியுண்டாவது, ஆஹாரம் ஜீர்ணமாவது முதலிய மிகவும் சிக்குள்ளவைகளான இன்னும் பற்பல காரியங்களை நரம்புமண்டலங்களும் மூளையும் சேர்ந்து ஒற்றுமையுடன் நமது மனதுக்கும் தெரியாமலே நடத்தி வருகின்றன. நாம் நடந்து செல்லும்போது அனேக விஷயங்களை மனதில் யோசித்துக்கொண்டே சென்றாலும், கால்களிலுள்ள தசைநார்கள் எல்லாம் அனுகூலமாக அசைந்து கால்களை நடந்து போகச் செய்வதும், நாம் வேறு விஷயங்களை மனதில் எண்ணிக்கொண்டு, எவ்விடத்திற்குப் போகிறோமோ அதையும் கவனிக்காமலிருக்கையில் குறித்த இடத்திற்கு நாம் போய்ச் சேருவதும் நரம்பு மண்டலங்களுடையவும் மூளையினுடையவும் ஒற்றுணர்ச்சியினால் தான் என்று அறியவேண்டும். இதில் தத்துவம் என்னவென்றால்—மூளையானது ஒரு பெரிய தந்தியாபீஸைப்போல் ஏற்பட்டிருக்கிறது. தந்தியாபீஸிலிருந்து தந்திக் கம்பிகள் அனேகம் வெளிவருவதுபோல், ஆயிரக்கணக்கான நரம்புகள் மூளையிலிருந்து வெளிவருகின்றன. ஒவ்வொரு நரம்பிலிருந்தும் அனேகம் கிளை நரம்புகள் உண்டாய் சரீரம்முடியவும் வியாபித்திருக்கின்றன. நரம்பு மண்டலங்களுடையவும் மூளையினுடையவும் ஸம்பந்தத்தினாலேயே மனதென்பதும் யோசனைகள் என்பவையும் ஏற்படுவதாகக் கருதவேண்டும். ஆகையால் மனதை அளப்பது இவ்வாறென்று அறிவதற்குமுன் உணர்ச்சிநரம்புகளுடைய (ஞானேந்திரியங்களுடைய) செயல்களின் பிரமாணம் இவ்விதமென்று அறிவது அவசியம்.

புலன்களென்னும் ஞானேந்திரியங்களை

அளக்கும் வகை:—கீழ்க்கூறிய ஆராய்ச்சிகளைக் கொண்டு மனதுக்கு வெளியில் உலகில் நடந்தேறும் விஷயங்கள் யாவும் கண், காது, மூக்கு, நாக்கு, சர்மம் என்கிற ஐம்புலன்களின் மூலமாகவே புத்திக்கு எட்டுகின்றன என்பதாக அறியப்படுகிறதல்லவா? ஞானேந்த்ரியங்கள் தம் தமது வேலையைச் செய்யாமலிருந்தால் வாஸ்தவமாய் ஒரு விஷயமும் மனதால் அறியமுடியாது. ஆகையால், ஞானேந்த்ரியங்கள் இவ்வளவு நேரத்தில் இவ்வளவு வேலையை நடத்துகின்றன என்று அறிந்தால், மனது செய்யும் வேலையையும், அவ்வேலையின் தன்மையைக்கொண்டு மனதையும் அளப்பது எளிது. சப்தங்களைக் கேட்பது, வஸ்துக்களைக் காண்பது, பரிசிப்பது, சுவையறிவது, முகருவது என்கிற இந்த்ரியச் செயல்களைப் பரீக்ஷிப்பதற்கும் அளப்பதற்கும் பற்பல வகையான சிறந்த இயந்திரங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அந்தஇயந்திரங்களின் தன்மைகளைப் பற்றி வாயால் விவரம் கூறுவதால் விஷயம் விளங்காது. ஆகிலும், இத்ரியங்களின் மூலமாய் மனதில் நடந்தேறும் யோசனை முதலியவற்றின் வேகங்களை அளப்பதற்கு இயந்திரங்களைக் கொண்டு செய்யப்படும் உபாயங்கள் இவ்விதமென்று ஒரு வழியைமட்டும் குறிப்பிடுகின்றோம்:—

மூளையிலிருந்து ஆயிரக்கணக்கான நரம்புகள் கிளம்பி உடலெங்கும் வியாபித்திருப்பதாகக் கூறப்பட்டதல்லவா? அவற்றுள் பஞ்சேந்த்ரியங்களின் மூலமாய் வெளி விஷயங்களைக் கிரஹித்துக்கொண்டு மூளைக்கு அறிவிக்கும் நரம்புகள் உணர்ச்சி நரம்புகள் (Sensory nerves) என்றும், மூளையிலிருந்துவரும் தூண்டுதல்களுக்கு இணங்க தசைநார் முதலியவற்றை வேலை செய்யச் செய்பவை வேலை நடத்தும் நரம்புகள் (Motor nerves) என்றும் கூறப்படுகின்றன. சரீரத்தில் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் நடந்தேறும் எல்லாவித செயல்களும் முற்கூறியவாறு இருவித நரம்புமண்டலங்களின் ஒற்றுணர்ச்சியினாலேயே நிறைவேற்றப்படுகின்றன. நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், வெளி விஷயங்கள் உணர்ச்சி நரம்புகளின் மூலமாய் மூளைக்குப் போக ஆரம்பிப்பது முதலாக, வேலை நடத்தும் நரம்புகளின் மூலமாய் மீண்டும் தசைநார் முதலியவற்றை வேலை செய்யத் தூண்டுகிறவரையில் இடையிலுள்ள கால அளவு எவ்வளவென்று, அதாவது மனதினுடைய அல்லது ஆலோசனையினுடைய வேகம் எவ்வளவென்று அறியவேண்டும்; அந்தக் காலத்தின் அளவு அல்லது மனதின் வேகமானது மிகவும் ஸூக்ஷ்மமானது. இதை அளப்பதற்காக க்ரோனஸ்கோப்(Chronoscope)என்று ஒரு அற்புதமான இயந்திரத்தை நிர்மாணம் செய்திருக்கிறார்கள். ஒரு நிமிஷம் என்பதை ஸூக்ஷ்மமான காலமென்று அறிகிறோமல்லவா? அந்த நிமிஷமும் 60 பாகமாகப் பிரிக்கப்பட்டு, அவ்விதமாக நிமிஷத்தில் அறுபதில் ஒரு அம்சமான அவ்வளவு சிறிய காலத்தைக் காட்டக்கூடியதான அளவு கோல் ஒன்று கடிகா யந்திரத்தில் அமைக்கப்பட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவ்விதமே உணர்ச்சி தரும் நரம்புகளின் மூலமாய் விஷயங்கள் மஹாவேகமாய் மூளைக்கு எட்டி, வேலை செய்யத்தூண்டும் நரம்புகளின் மூலமாய் உடனே அந்தந்த காரியத்தை நடத்தும் யோசனையானது சொல்லக்கூடாத விதமாய் வெகு துரிதமாக நடந்தேறுகிறதென்றாலும், அவ்விதம் நடப்பதற்கும் ஒரு கால அளவு வேண்டியிருக்கிறது. க்ஷண நேரங்களையும் குறிப்பதற்குக் கடிகாயந்திரத்தில் முள் ஏற்படுத்தப்பட்டிருப்பது போல், க்ரோனஸ்கோப் என்கிறஇயந்திரத்திலும் அவ்விதமான ஏற்பாடுகள் வெகு ஒழுங்காகவும் ஆச்சரியகரமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இயந்தி

ரத்திலுள்ள ஒருவித குமிழ் (Button) போன்ற பாகத்தை ஒருவன் பரிசித்துக் கொண்டால், அவனுடைய மனது எந்தெந்த க்ஷணத்தில் எவ்வெவ்வளவு வேலை செய்திருக்கிறதென்று அது உடனுக்குடனே குறிப்பிடுகின்றது.

விஷய உணர்ச்சியின் வேகம்:—ஒரு சப்தம் அல்லது சொல்லைக் கேட்டவுடன், அல்லது வஸ்துவைப் பார்த்தவுடன் மனதில் எவ்வளவு காலத்தில் எவ்விதமான சொற்களைப்பற்றி எவ்வாறு யோசனை நடந்தேறுகிறதென்று சிறிது கவனிப்போம்; வெண்ணிறமான ஒரு வஸ்துவைக் கண்டதும் வேறு எந்தெந்த பெயர்கள் மனதுக்குத் தோற்றக்கூடியவையென்று கவனிக்க வேண்டும். வெளுப்பு என்றவுடன் ஒருவன் பாலையும் மற்றொருவன் சர்க்கரையையும், வேறொருவன் சில பக்ஷிகளையும் மனதில் நினைவுக்குக் கொண்டு வரக்கூடும். ஒருவனுக்கு இன்னும் அநேகம் பொருட்களைப்பற்றி மனதில் ஏககாலத்தில் நினைவு உண்டாகலாம். அவ்விதம் நினைக்கப்படும் பொருட்களுடைய உருவங்களும் வகைகளும் பலவாறாக இருக்கும். இவ்விதமாக ஆராய்ச்சி செய்வோமானால், மனதில் ஒவ்வொரு க்ஷணத்திலும் அளவற்ற யோசனைகள் பல விஷயங்களைப்பற்றி உண்டாவதாகத் தெரியவருவதால், அவை இவ்வளவு விஷயங்களென்றும், இவ்வளவு காலத்தில் நடந்தேறுகின்றனவென்றும் வாயால் சொல்ல முடியாது. இவை அனைத்தையும் க்ரோனஸ்கோப் இயந்திரமானது நன்றாக அளந்து மனதின் ஸூக்ஷ்மாம்சங்களையும் விளக்கச் செய்கிறது. மனதை அளப்பதற்கு மாத்திரம் இந்த இயந்திரம் உபயோகப்படவில்லை. குழந்தைகளுக்கு எழுத்துக்களைக் கற்பிப்பதற்கும், கள்ளர்களுடைய மனதிலுள்ள விஷயங்களை எளிதில் அறிவிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. இந்த இயந்திரம் வைத்தியர்களுக்கும் மிகவும் உபயோகமானது என்று எண்ணி, வைத்தியப் பத்திரிகையில் இவ்வியாஸம் எழுதப்பட்டது; இந்த இயந்திரத்தைக்கொண்டு அபஸ்மாரம் என்கிற காக்கைவலி, உந்மாதம் என்னும் பைத்தியரோகம், மூர்ச்சை இவை முதலியவற்றின் தத்துவங்களை அறிந்துகொண்டு, இதன் மூலமாய் வியாதியாளிகளுக்கும் சிலவிதத்தில் உதவி செய்ய வழியுண்டு. இவ்விதமான கருவியினால் மூளையின் சக்தியைப் பற்றி அநேக விஷயங்களையும் போதித்து வருகிறார்கள். அதாவது மாணாக்கர்களில் எவனெவனுக்கு எந்தெந்த விஷயத்தில் ஞாபக சக்தி விசேஷமாயிருக்கின்றதென்று முதலில் கவனிக்கவேண்டும். அவனவனுக்குள்ள சக்தியை எவ்வாறு அதிகரிக்கச் செய்யலாமென்றும், அவனவனைப் படிப்பிக்க வேண்டிய மாதிரிகள் என்னென்னவென்றும் உணரவேண்டும். அதற்காக அமெரிகா முதலிய நாடுகளில் மேற்கூறிய இயந்திரத்தைக் கொண்டு மாணாக்கருடைய மனோசக்தியை நன்றாக அளந்து, அவனவனுடைய மனதின் தன்மைக்குத் தகுந்தவாறு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். மனதைப்பற்றிய வியாதிகளின் தத்துவங்களையும், அவ்வியாதிகளைப் போக்குவதற்கேற்ற உபாயங்களையும் அறிவதற்கு மனதை அளப்பதற்காக ஏற்பட்ட மேற்கூறிய கருவியை உபயோகித்து வருகின்றனர்.

INDIAN MEDICAL SERVICE.

இந்தியன் மெடிகல் ஸெர்வீஸ் என்னும் வைத்திய உத்தியோகம்.

By

Mr. S. NALLAN CHAKRAVARTI, B.A.

மேற்கூறிய பெயர்கொண்ட வைத்திய உத்தியோகமானது, 1764-ம் ௵ ஜனவரி௴ முதல் தேதியன்று இராணுவ இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கு சிகித்ஸை செய்வதற்கு உதவுமாறு ஏற்படுத்தப்பட்டது. இதற்காக இப்பொழுது

150-ம் வருஷத்திய மஹோத்ஸவம் ஒன்று நாடெங்கும் பிரபலமாக நடந்தேறியது. இப்பொழுதுள்ள வைத்திய உத்தியோகத்திற்கு மூலகாரணமாய் அக்காலத்தில் இவ்வித ஸெர்வீஸ் ஏற்பட்டது. அப்பொழுதும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வைத்தியர்களை உத்தியோகத்திற்காக அனுப்பிக் கொண்டிருந்தனர். இத்துடன் இந்திய நாட்டைச் சேர்ந்த சுதேச அரசர்களிடம் அவர்கள் வைத்தியர்களாக உத்தியோகம் வகித்துவந்தனர். இவ்வரசர்களிடம் உத்தியோகம் செய்துவந்த வைத்தியர்களைப் பற்றி கர்னல் D. G. க்ராவ் போர்ட், I. M. S. என்பவர் "இந்திய வைத்திய உத்தியோகசரித்திரம்" (History of the Indian Medical Service) என்கிற நூலில் விவரங்கள் கூறியிருக்கிறார். இந்தியன் மெடிகல் ஸெர்வீஸைச் சேர்ந்த காப்ரீல் ப்ராடன் என்பவர், ஷாஷஜா என்கிற நவாபுக்கு வைத்தியம் செய்ததால், ஈஸ்டு இந்தியாகம்பெனியாருக்கு வர்த்தக சாலை ஸ்தாபனம் செய்யவும், வங்காள மாகாணத்தில் வர்த்தகம் செய்யவும் தகுந்த ஸௌகரியங்களைப் பெற்றார். இவ்விதமே ஹாமில்டன் என்பவர், பரக்ஸியர் என்கிற சக்கிரவர்த்தியினிடம் கல்கத்தா நகரத்தையும் அதைச் சார்ந்த சுற்றுப் பக்கங்களையும் இனமாக அடைந்தார். இவ்விஷயங்கள் ஏதோ கட்டுக் கதையாகத் தெரிய வருகின்றனவாகிலும், ஆங்கிலேய இராஜ்ய ஸ்தாபனத்திற்கு மேற்கூறிய வைத்தியர்களால் அனுகூலம் ஏற்பட்டதாயறியப்படுகிறது. மகுடாபிஷேகம் நடந்த வருஷத்தில், "இந்தியன் மெடிகல் ஸெர்வீஸினால் இந்தியாவுக்கு என்ன நன்மை செய்யப்பட்டது?" என்று கேள்வியுண்டாக, 'இந்தியன் மெடிகல் ஜர்னல்' என்கிற வைத்தியப் பத்திரிகையானது, இந்திய நாட்டிலுள்ள வியாதிகளுக்குச் சிற்சில சிகித்ஸைகள் ஏற்படுத்தியும், புது மாதிரியான வியாதிகளுக்கு ஔஷதங்களைக் கண்டு பிடித்தும் இந்தியன் மெடிகல் ஸெர்வீஸ் உதவிபுரிந்து வருவதாகக் கூறிற்று. இந்தியன் மெடிகல் ஸெர்வீஸைச் சேர்ந்த வைத்தியர்களில் பெரும்பான்மையோர், வைத்தியத் தொழிலுடன் வேறு இலாகாக்களைச் சேர்ந்த தொழில்களையும் பார்த்து வந்தார்கள். உதாரணமாக-ஸர் [illegible]ல்லியம் ப்ரூக் ஓ [illegible]நஸ்ஸி என்பவர் கல்கத்தாவில் வைத்திய கலாசாலையில் இ[illegible]ஸாயன சாஸ்திர போதகராக (Professor of chemistry) இருந்துகொண்டு, இந்தியா[illegible] மின்சார தந்தியை முதன் முதல் ஏற்படுத்தி அதனாலுண்டான பெரும் புகழுக்கும் பாத்திரமானார். 1852-ம் வருஷத்தில் இவரை இந்தியாவில் ஏற்பட்ட தந்தியிலாகாவில் பிரதம உத்தியோகஸ்தராக நியமித்தார்கள். 1852-ம் வருஷத்தில் முதன் முதல் கல்கத்தாவில் தந்தி போடப்பட்டு, பிறகு 1854-ம் வருஷத்தில் ஆக்ராவுக்குக் கொண்டுபோகப்பட்டது. அப்பால், 185[illegible]-ம் வருஷத்தில் சென்னையிலும் பம்பாயிலும் தந்திகள் போடப்பட்டன. மேலும், தபால் இலாகாவும் இந்தியன் மெடிகல் ஸெர்வீஸைச் சேர்ந்த வைத்தியர்களாலேயே பார்வையிடப்பட்டு வந்தன. சில ஸமயம் ஸிவில் ஸர்ஜன்கள் அவர்களிருக்கும் ஊர்களில் போஸ்டு மாஸ்டர்களாகவும் வேலை செய்து வந்தனர். ஜேம்ஸ் ராங்கின் என்கிற வைத்தியர் வடமேற்கு மாகாணத்தில் 1841-முதல் 1845-ம் வருஷம் வரையில் போஸ்டு மாஸ்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருந்தார். இத்துடன் 1861-ம் வருஷத்தில் ஜார்ஜ் பேடன் என்பவரை போஸ்டாபீஸுகளுக்கு டைரக்டர் ஜெனரலாகவும் நியமித்திருந்தனர். எலிஜா இம்பே யென்கிற வைத்தியரை 1856 முதல் 1868 வரையில் பம்பாயில் போஸ்டுமாஸ்டர் ஜெனரலாக ஏற்படுத்தினார்கள். நாணயங்கள் அச்சிடும் தங்கசாலைகளில் உத்தியோகம் வகித்தவர்கள் இந்தியன் மெடிகல் ஸெர்வீஸைச்

சேர்ந்தவர்களேயாம். இந்த I. M. S. உத்தியோகஸ்தர்களில் இன்னும் சிலபேர் காட்டிலாகா ஸம்பந்தமான வேலைகளை ஸ்தாபிப்பதற்காகவும் உழைத்து வந்தனர். சென்னையில் திரவிய குண சாஸ்திரம் (Meteria Medica), தாவர சாஸ்திரம் (Botany) இவைகளுக்கு ஆசிரியராயிருந்த க்ளீகாரன் என்பவர் 1867-ம் வருஷத்தில் காட்டிலாகாவில் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். தாவர சாஸ்திரத்தை நன்குணர்ந்த வைத்திய உத்தியோகஸ்தர்கள் வேறு பற்பல உத்தியோகங்களையும் பார்த்து வந்தார்கள். ராக்ஸ்பர்க், வாலிச், ஓயிட், காம்ஸன், க்ரிபித், கிங் ஆகிய இவர்கள் எல்லோரும் தாவர சாஸ்திரத்தில் மிகவும் நிபுணர்கள். மேலும் இவர்கள், ஐந்துக்களைப்பற்றிய சாஸ்திரத்தில் (Zoology) மிகவும் வியாபகர்களாயிருந்து சிறந்த நூல்களையும் இயற்றியிருக்கின்றனர். இதற்காகவே வாலிச் என்பவருக்கு லினியன் ஸொஸைடி என்கிற ஸங்கத்தாருடைய பொன் பதக்கமும், கார்டர் என்பவருக்கு இராயல் ஸொஸைடியாரால் ஒரு தங்கப்பதக்கமும் பரிசளிக்கப்பட்டன. சிறந்த யோக்கியதாபத்திரங்களும் இவர்களுக்குக் கிடைத்தன. சுருங்கச் சொல்லில் மேற்படி இந்தியன் மெடிகல் ஸெர்வீஸைச் சேர்ந்தவர்கள் இந்து தேசச் சரித்திரத்தைப்பற்றி விவரங்கள் எழுதியிருக்கின்றனர். என்ஸ்லீ என்பவர் சித்திர வேலையைப்பற்றிய சிறந்த சிலக் கிரந்தங்களை இயற்றியிருக்கின்றார். ஈஸ்டு இந்தியா கம்பெனியின் காலத்தில் உத்தியோகம் புரிந்த ஹால் வெல் என்பவர் இந்திய பாஷைகளைப்பற்றியும், இந்துக்களின் மதக்கொள்கைகளைப் பற்றியும், மதஸம்பிரதாயங்களைப் பற்றியும் நூல்கள் எழுதியிருக்கிறார். 1790-ம் ஷதி-ல் ஹாரிஸ் என்கிற டாக்டர் ஹிந்துஸ்தானி அகராதியைப் பிரசுரம் செய்தார். போர்டு வில்லியம் காலேஜில் ப்ரின்ஸிபாலாயிருந்த கில்க்ரைஸ்ட் என்பவர் பாஷாதத்துவத்தைப்பற்றி பற்பல நூல்கள் இயற்றி, நூதனமாக வரும் I. M. S. ஆபீஸர்களுக்கு ஹிந்துஸ்தானி பாஷையைக் கற்றுக்கொடுத்து வந்தார். 1799-ம் வருஷத்தில் ட்ராம்பண்ட் என்பவர் மராடி-குஜராதி பாஷைகளுக்கு இலக்கணங்களைச் செய்தார். வில்ஸன் என்பவர் அனேக பாஷைகளில் நிபுணராயிருந்ததால் 1832-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்டு நகரத்தில் ஸம்ஸ்கிருத பண்டிதராக நியமிக்கப்பட்டார்.* ஆலாய் ஸ்ப்ரெஞ்ஜெர் என்பவர், 1844-ம் வருஷத்தில் டெல்லியில் மஹம்மதிய கலாசாலையில் பிரதம ஆசிரியராகவும், 1848-ம் வருஷத்தில் லக்னோவில் உதவி ரெஸிடெண்டாகவும், 1850-ம் வருஷத்தில் கல்கத்தாவில் பாரஸீக பாஷையை மொழி பெயர்ப்பதற்காகவும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டார். K. யெக்லாய்ட் என்பவர் இந்தியாவில் கால் நடைகளுக்குண்டாகும் வியாதிகளைப் பற்றி விஷயங்களை விளக்கிக் காட்டியதால், ராஜா ஷியோ பக்ஷ்பக்ஸா என்பவர் மிருகவைத்தியசாலை, மிருகவைத்திய கலாசாலை இவைகளை 30,000 ரூபாய் செலவு செய்து ஏற்படுத்தினர். இந்தியாவில் வைத்தியக் கல்வியானது I.M.S. ஆபீஸர்களாலேயே பரவிவந்தது. இதற்காக இந்த உத்தியோகஸ்தரின் உதவியைக் கொண்டு கவர்ன்மெண்டார் அதிகத் திரவியம் செலவு செய்து வைத்தியகலாசாலைகளை ஸ்தாபித்து வருகின்றனர். இந்த ஆபீஸர்களை இக்கலாசாலைகளில் போதகர்களாகவும் ப்ரின்

* டாக்டர் வில்ஸன் ஈஸ்டு இந்தியா கம்பெனியில் அஸிஸ்டெண்டு ஸர்ஜனையிருந்தபோது 1812-ம் வருஷத்தில் மேகஸந்தேசம் என்கிற காளிதாஸனுடைய ஸம்ஸ்கிருத காவியத்தை இங்கிலீஷில் மொழி பெயர்த்து, அப்பொழுது கவர்னர் ஜெனரலாயிருந்த மின்டோதுரையவர்களுக்கு அர்ப்பணம் செய்தார். இவ்விஷயம் வைத்திய கலாநிதியின் பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் மேகஸந்தேசத்தின் முகவுரையில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.

வியாலாகவும் நியமிக்கப்பட்டு சிகித்ஸாமுறைகள் கற்பிக்கப்படுகின்றன. சுகாதார முறைகளைப்பற்றி இந்த உத்தியோகஸ்தர்கள் பல விதமான முயற்சிகள் செய்து காரியங்களை நிறைவேற்றியிருக்கின்றனர்.

மேற்படி உத்தியோகஸ்தர்களில் அனேகர் யுத்தம் நேர்ந்த ஸமயங்களில் அவ்விடத்தில் பலவிதத்திலும் நன்மை செய்திருக்கின்றனர். ஆனால் நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் இப்பொழுது ஒன்றுண்டு. இந்தியன் மெடிகல் ஸெர்விஸைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் முன்னால் யுத்தகாலங்களில் உதவி செய்யவேண்டுமென்கிற யோசனையுடன் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டனர். அப்பொழுது இந்தியாவில் மேல் நாட்டு வைத்தியம் பரவாமலிருந்ததால் ஆஸ்பத்திரி முதலியவைகளிலும் அவர்களே நியமிக்கப்பட்டு வந்தனர். இப்பொழுது இந்தியாவிலேயே ஆங்கில வைத்தியம் கற்ற அனேக புத்திமான்கள் கிடைப்பதால் ஆஸ்பத்திரிகளிலும், வைத்திய-சுகாதாரஸம்பந்தமான டிஸ்ட்ரிக்ட் ஆபீஸுகளிலும், வைத்திய கலாசாலைகளிலும இந்தியர்களிலுள்ள ஸிவில் மெடிகல் உத்தியோகஸ்தர்களே நியமிக்கப்பட வேண்டுமேயன்றி, இராணுவ இலாகாவுக்கென்று ஏற்பட்ட ஸர்ஜன்கள் நியமிக்கப்படுவது உசிதமாகத் தோற்றவில்லை. இப்பொழுது 150-ம் வரு[illegible] கொண்டாட்டம் நடந்ததை அனு[illegible] இந்தியன் மெடிகல் ஸெர்விஸின் வரலாற்றைப்பற்றி நமது ஜனங்களும் முக்கியமாய் வைத்தியர்களும் விஷயம் அறிவது நலமென்று நினைத்து இவ்வியாஸம் எழுதப்பட்டது.

SOME POISONS AND ANTIDOTES.

சில விஷங்களுக்கு முறிவிகள்.

BY.

Mr. V. M. Rudramurthi Achari.

Vidyar.

சீதமண்டலம்:—இதனால் கடியுண்ட பெயர்கள் உடனே முதிர்ந்த தேங்காயை உடைத்து ஒரு மூடியிலடங்கிய தேங்காயை யெல்லாம் கீறி யெடுத்துச் சாப்பிட வேண்டும். இதை உடனே உபயோகித்தால் விஷவேகம் குணமாவதுண்டு.

நல்ல பாம்பு விஷம்:—ஸர்ப்பம் கடித்தவுடனே எருக்கிலைக்கொழுந்தும், அத்துடன் அதில் நாலில் ஒரு பங்கு புகையிலையும் சேர்த்து, அரைத்து பெரிய நெல்லிக்காயளவு சாப்பிட வேண்டும். ஸர்ப்ப விஷம் தலையில் ஏறி, கண் பஞ்சடைந்து, பற்கள் கட்டிக்கொண்டு இருந்த போதிலும், கட்டிய பற்களை மெதுவாக நீக்கி, மேற்படி ஔஷதத்தை உள்ளுக்குச் செலுத்தினால் குணமுண்டாகிறது. வேறு விதமான பாம்பு விஷங்களிலும் இதை உபயோகிக்கலாம்.

தேள்விஷம்:-கொட்டின க்ஷணமே விஷம் மேலுக்கு ஏறாமல் அவ்விடத்திற்கு மேல் ஒரு கட்டுப்போட்டு, புதிய சுண்ணாம்பையும் உப்பையும் கலந்து நன்றாக அரைத்து, கொட்டிய வாயில் சூடுண்டாகுமாறு பத்து நிமிஷம் தேய்த்து, சுண்ணாம்பையே கனமாகத் தடவிவிட்டு குளிர்ந்த காற்று வீசுமிடத்தில் உலாவிக் கொண்டிருந்தால், ஈரம் காயக்காய விஷம் இறங்கத் தொடங்கும்.

ஸாதாரண பூச்சிக்கடிகள்:—நதிகளிலாவது குளங்களிலாவது அலைகளால் அரிக்கப்பட்டு ஓரங்களில் ஒதுங்கியிருக்கும் மெல்லிய பூமணலைக் கொண்டுவந்து, கட்டித் தயிரை விட்டு மை போல் அரைத்து, ஒரு பீங்கானில் வைத்துக் கொண்டு 4-அல்லது 5-நாள் வரையில் கடிகளின் மேல் நன்றாகத் தேய்த்து வருவதால் துர்நீர்கள் கிரமமாக வெளிவந்து விடும்; அப்பால், சிறிதளவு ஈயவெள்ளையும் கர்ப்பூரமும் கலந்து, தேங்காயெண்ணெயையும் போதுமான அளவு சேர்த்து, நன்றாகக் குழைத்து மேற்படி கடிகளுள்ள இடங்களில் காலையும் மாலையும் தேய்த்து சுத்தமாகக் கழுவி வரவேண்டும்.

வெறிநாய் விஷம்:—கடியுண்டவர்கள், மணத்தக்காளிச் செடியை இடித்து இரஸம் பிழிந்து, சல்லாத்துணியில் ஏழு தடவை வடிக்கட்டி, ஒரு நாளைக்கு அரைக்கால்படி ரஸம் வீதம் மூன்று நாட்கள் உட்கொள்ள வேண்டும். ஆறு நாள் வரையில் உப்பில்லாமல் கஞ்சியையே சாப்பிட்டு வரவேண்டும். ஏழாவது நாள் ஓமம் அரைத்துத் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்து கொண்டு, ஆறுவாரம் வரையில் நல்லெண்ணெய் சேர்க்காமல் மற்ற ஸாதாரண உணவுகளைப் புசித்து வந்தால் வெறிநாய் விஷத்தினால் உண்டாகும் விகாரங்கள் குணமாய்விடும்.

வைத்திய கலாநிதி.

ப்ரமாதீச ஹூ தைமீ.

INDIA AND YELLOW FEVER.

இந்தியாவும் பித்தஜ்வரமும்

இவ்விஷயத்தைப்பற்றி நாம் எழுதுவதற்கு முன் 'பித்தஜ்வரம்' என்கிற வியாதியின் வெகு கோரமான தன்மைகளைப் பற்றி விவரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.—

'பித்தஜ்வரம்' என்கிற இவ்வியாதியானது ஸாதாரணமாய் உஷ்ணதேசங்களிலும் முக்கியமாய்க் கடலோரங்களிலும் உண்டாகக்கூடியது. அமெரிக்காவில் கிழக்கு மேற்கு ஸமுத்திரக் கரைகளிலும், ஆப்பிரிக்கா முதலிய வேறு சில இடங்களிலும் இது அடிக்கடி உண்டாய் வருகிறது. சர்மம் முழுதும் அல்லது சில பாகம் மிக மஞ்சள் நிறமாவதும், அபாயகரமான முடிவு நேரிடக்கூடிய ஸமயத்தில் கறு நிறமான வாந்தியாவதும் இதில் குறிப்பிடக்கூடிய குறிகளாம்; ஆனால் இக்குறிகள் எப்பொழுதும் காணக்கூடியனவையல்ல. மற்ற ஸமயங்களில் இது ஒருஸாதாரணமான ஸந்ததஜ்வரம் (Remittent fever) என்னும் தாபஜ்வரம் போல் காணப்படும். இந்த வியாதி உண்டானால் எப்பொழுதும் பிராணபாயம் அதிகமாய் நேரிடும்; விசேஷமாக யௌவன வயதிலிருப்பவருக்கும், பலசாலிகளுக்குமே இவ்வியாதி பெருந்தீங்கு விளைவிக்கின்றது, ஆகவே, ஸேனைகளிலுள்ள போர்வீரர்களுக்கு இவ்வியாதி உண்டானால் அவர்களில் பெரும்பான்மையோருக்கும் ஆபத்தையே விளைவிக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

குறிகள்:——இவ்வியாதி திடீரென்று உண்டாகும்; ஆனால், இவ்வியாதி உண்டாகும் பொழுதே இத்துடன் பலயீனமான *உணர்ச்சியும், மனது சரீரம் இவற்றிற்கு ஒருவிதமான அமைதியின்மையும், சில நேரம் வரையில் களைப்பும், தலைச்சுற்றலும், சிறிதளவான அல்லது விசேஷமான குளிரும் நடுக்கலும் தொடர்ந்துண்டாகும். உடனே மிகவும் உஷ்ணம் அதிகரித்து வெகு உக்கிரமாக ஜ்வரம் அடிக்கத் தொடங்கும். நாடிகள் மிக வலிவுடன் படபடத்து அடிக்கும்; கழுத்துக்கு இரு புறத்திலும், இரண்டு கன்னங்களிலும் உள்ள நாடிகள் நன்றாகப் பெருத்து அவ்வாறு வேகமாய் அடித்துக் கொள்வதை நன்கு பார்க்கக்கூடும். குமட்டல் மேன்மேலும் உண்டாகத் தொடங்கியதும், முகம் சதைபெருத்து ஊதியிருக்கும்; பிணியாளி குளிர்ந்த காற்று வேண்டுமென்று அலைந்து தவிப்பான்; நாக்கு வெளுத்தும் சிறிது மஞ்சள் நிறமுடையதாகவும் காணப்படும்; அதிகமாய் தாஹம் எடுக்கும்; கண்களில் சிவப்பும் எரித்தலும் அபரிமிதமாயுண்டாகும். தலையில் பாரமும் பிளக்கப்படுவது போன்ற வலியும் ஸஹிக்க முடியாமலிருக்கும். கழுத்தின் பின்புறத்திலும் துடைகளுக்கு அடியிலும் நோய் அதிகரிக்கும். சர்மமானது மிகவும் வரண்டு போய் அதிக சூடாக இருக்கும். குமட்டலும் அதிகரித்துப் பித்த நீர் வாந்தியாகும்; அப்பொழுது குடலின் முதற்பகுதியைச் சேர்ந்த இரைப்பை கோளாறடையும்; இரைப்பைக்கு மேல் வயிற்றினுள் விசேஷமான உஷ்ணமும், புண் உண்டானது போன்ற நோயும் காணும். மனக்கவலை, புரட்டால் அல்லது அமைதியின்மை, மேன்மேலும் பெருமூச்செறிதல், மூத்திரம் மிகச் சிவந்தும் கலங்கியுமிருத்தல் என்னும் துர்க்குணங்கள் உண்டாகும். இவ்வித நிலைமையில் சரீரத்தில் ஆங்காங்கு வீக்கம் ஏற்படும். இந்த ஜ்வரத்திற்கு இக் குறிகள் முதற்பாகம் எனப்படும். இவ்வித நிலைமையில் இக்குறிகளெல்லாம் 24 முதல் 48 அல்லது 60 மணி

ஸாவகாசம் வரையில் நீடித்துப் போராடும். பிறகு, இந்த வியாதியின் முற்கூறிய குறிகளில் பெரும்பான்மையும் திடீரென்று குறையும்; சில வேளை இவ்விதம் திடீரென்று உடனே தணிவுண்டாவதால் பிராணனுக்கு மோசம் ஏற்படும். ஆனால் குமட்டலும் வாந்தியும் இந்நிலைமையில் இன்னும் விசேஷமாய் அதிகரிக்கும்; நாடியானது மிகத் துவண்டது போல் மெதுவாக அசையும்; உஷ்ணம் குறைந்து விடும்; சர்மம் மிருதுவாகவும் பிசுபிசுப்புள்ளதாகவும் தோன்றும்; மூத்திரமானது அளவில் குறைந்து வர்ணத்தில் மஞ்சளாகவும் இருக்கும்; கண்கள், கழுத்து, மார்பு இவ்விடங்களில் ஒருவித மஞ்சள் நிறமான அடையாளம் முதலில் சிறிது தோன்றி, பிறகு கிரமமாக உடம்பெங்கும் பரவி வரும். சிரஸ்ஸுக்குள் ஏதோ குழப்பமான உணர்ச்சி அல்லது ஸந்நிபாத ஸம்பந்தமான மயக்கமும் (delirium), கண்களில் பளிங்கு போன்ற பளபளப்பும் உண்டாகும். இவை, இவ்வியாதியின் இரண்டாவது நிலைமையில் ஸம்பவிக்கும் குறிகளாம். இந்த நிலைமை 12 முதல் 48-மணி ஸாவகாசம் வரையில் நீடிக்கக்கூடும்; அதற்கு மேல் எப்பொழுதும் இக்குறிகள் நீடிக்க மாட்டா. மூன்றாவது அல்லது கடைசி நிலைமையில் நாடிகள் விழத்தொடங்கும்; விட்டு விட்டு முறை தவறியும் அடிக்கும்; சில வேளை வெகு வேகமாகவும் அடித்துக்கொள்ளும்; வயிற்றை வலித்துக்கொண்டு பெரும் சப்தத்துடன் அடிக்கொரு முறை வாந்தியுண்டாகும்; அந்த வாந்தியில் கறுப்பான கபம் போன்றத் திரவம் வெளியாகும்; முகக்களையானது மேன்மேலும் ஒடுக்கப் கொள்ளும்; கண்கள் சுபாவமான தெளிவை யிழந்து அவற்றின் பார்வையும் மந்தப்படும்; தேஹத்தில் கறுப்பான சிறிய தழும்புகள் உண்டாகும்; சோர்வு அதிகமாகும்; ச்வாஸம் சப்தத்துடனும் வெகு வேகமாகவும் விடப்படும்; உடம்பின் மேற்புறமும், கை கால்களும் குளிர்ந்துபோய் அவற்றில் பசை போன்ற வியர்வை யுண்டாகும்; இவ்வியர்வையும் குளிர்ச்சியும் பிராணன் நீங்குகிற வரையில் தொடர்ந்து அதிகரிக்கும். சில ஸமயம் இவ்வியாதியானது வெகு பயங்கரமாக அதன் கொடுஞ் செயலைக் காட்டி வேகமாக அதிகரித்து, பிணியாளியை 4-முதல் 20-மணி ஸாவகாசத்திற்குள்ளாகவே தனக்கு இரையாக்[illegible]க்கொள்ளும்.

சிகித்[illegible]ஸ:—இந்த வியாதியின் சிகித்ஸையைப்பற்[illegible] வைத்தியர்களுடைய அபிப்ராயங்கள் பலவாறாக இருக்கின்றன. எவ்விதமானாலும், சரீரத்திலுண்டான கோளாறுகளைப் போக்குவதற்குத் தகுந்த ஸாதாரண சிகித்ஸைகள் செய்வது அவசியம். எங்கு வீக்கமும் நோயும் இருக்கின்றதோ அங்கு ஆண்டிப்ளொஜிஸ்டிக் (Antiphlogistic) என்கிற மருந்தைப் பூசவேண்டு மென்றும், சோர்வு உண்டாகும் பொழுது உத்தீபனகாரிகளான (Stimulants) ஔஷதங்களைக் கொடுக்க வேண்டுமென்றும் ஆங்கில வைத்தியர்களில் பலர் சொல்லுகிறார்கள். இந்தரோகம் ஆரம்பிக்கையில் இரத்தமோக்ஷணம் (Blood-letting-இரத்தத்தைக் குத்தி வாங்குதல்) செய்வது நலம்; எந்த இடத்தில் இரத்த மோக்ஷணம் செய்தால் பிணியாளிக்குக் கஷ்டமுண்டாகாதோ அவ்விடத்தில் செய்வது உசிதம். ரோகியின் உடம்பை உள்ளும் புறமும் எவ்விதத்திலும் பரிசுத்தமாக வைத்திருக்க ஏற்பாடு செய்யவேண்டும். விரேசனத்திற்காகவும், மூத்திரம் அதிகமா யிறங்குவதற்காகவும் தகுந்த ஔஷதங்கள் கொடுக்கவேண்டும். இவ்வியாதியில் சுத்தமான பாதரஸம் விசேஷமாய் உபயோகப் படுத்தலாமென்று தெரிய வருகிறது. இந்த ரோகத்தில் உபயோகிக்கிற ஔஷதச் சரக்குகளில் வெகு முக்கியமானது

இதுதான் என்று கூறப்படுகிறது. இவ்வியாதியில் அபினிச் சத்து (Morphine) வெகு விசேஷமான குணந்தரக்கூடியதென்று சிலரது கொள்கை; ஆனால் அதை உபயோகிப்பதில் வெகு ஜாக்கிரதையெடுத்துக்கொள்ள வேண்டிய கஷ்டத்துடன், ஒரு கால் அது மூத்திரத்தையும் கட்டிவிடும். வரண்டு போகும் சர்மத்தின் பேரில் பசையுள்ள சில குளிர்ந்த பூச்சுகளை (பாதுவம்பிசின் முதலியவற்றை) உபயோகிப்பது நலம். பொறுக்க முடியாத தலைவலி, கழுத்துவலி, வயிற்றுவலி இவைகளில் அட்டை முதலியவற்றைக் கொண்டு இரத்தத்தை வெளிப்படுத்துவது உசிதமாகும்; அதனால் தற்காலத்தில் குணம் உண்டாகலாம்.

பித்த ஜ்வரத்திற்கும் இந்தியாவுக்கும் உண்டான ஸம்பந்தம் என்னென்றுச் சிறிது விவரிப்போம். சுமார் இரண்டரை வருஷங்களுக்கு முன் பனாமா என்கிற இடத்தில் கப்பல்களின் போக்குவரத்துக்கு ஸௌகரியமுண்டாக்குவதற்காக இரண்டு ஸமுத்திரங்களையும் சேர்த்துவிடும்படியான கால்வாய் வெட்டிய போது, அக்கால்வாயின் திறப்பினால் இத்தேசத்தில் பித்த ஜ்வரம் பரவக்கூடுமோ வென்று நினைத்து, இந்திய கவர்ன்மெண்டார் மேஜர் S. P. ஜேம்ஸ், I. M. S. என்பவரை அவ்விஷய பரிசோதனையின் பொருட்டு ஒரு கமிஷனராக நியமித்தார்கள். இவ்விஷய ஆராய்ச்சியைப்பற்றிய ரிபோர்டு இப்பொழுது தயாராய் 'இந்தியன் ஜர்னல் ஆப் மெடிகல் ரிஸௌர்ச்' (The Indian Journal of Medical Research) என்கிற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டும் இருக்கிறது. மேஜர் ஜேம்ஸ் அவ்விடம் சென்று செய்த பரிசோதனையினால், பித்தஜ்வர வாடையானது ஹாங்காங் பட்டணத்திற்கு நேராக வர ஸந்தர்ப்பமிருக்கிறதே யொழிய, இந்தியாவுக்கு நேராக வரஹேதுவில்லை யென்றும், ஆனால் சைனா, ஜப்பான் முதலிய தேசங்களின் மூலமாய் ஒரு கால் இந்தியாவுக்குத் தொற்றக்கூடுமென்றும், ஆகிலும் முன்பு எதிர்பார்த்தபடி அத்தகைய ஆபத்து ஏற்படுவதற்கு இப்பொழுது காரணமில்லையென்றும் தெரியவந்ததாக அவர் கூறியிருக்கிறார். அட்லாண்டிக் ஸமுத்திரப் பிராந்தங்களில் சுகாதாரத்தைப்பற்றி உழைத்துவரும் ஸானிடரி எஞ்ஜினீர்களும், ஆரோக்கிய முறையைக் காப்பதற்கென்று ஏற்பட்ட ஆபீஸர்களும் இந்த வியாதியைத் தடுப்பதற்கு வேண்டிய பெருமுயற்சிகளைச் செய்து வருகின்றனர். பித்த ஜ்வரம் அபாயகரமாக இந்தியாவில் பரவாதென்று தோன்றினாலும், அவ்விஷயத்தில் முன் ஜாக்கிரதை விசேஷமாய் வேண்டியிருக்கிறதென்றும், அதற்காக அந்தந்த வழிகளில் பாராக்காரர்களை நியமிக்க வேண்டுமென்றும், அடிக்கடி இந்த ஜ்வரத்தைப்பற்றி ரிபோர்டு செய்து வருவதற்காக ஒரு வைத்திய உத்தியோகஸ்தரை நியமிக்க வேண்டுமென்றும், ஆஸ்ட்ரேலியா முதலிய இடங்களுக்கு வியாபார நிமித்தம் கப்பல்களைப் போக விடாமல் தடுக்க வேண்டுமென்றும், ஹாங்காங் சிங்கப்பூர் இவ்விடங்களில் இரண்டு வைத்திய உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டுமென்றும் மேஜர் ஜேம்ஸ் கவர்ன்மெண்டுக்கு வற்புறுத்தி யெழுதுகின்றார். விஷக் கொசு ஸம்பந்தமாக வரும் வியாதிகளைத் தடுப்பதற்கு, ஆங்காங்கு நாள்பட்ட ஜலம் தங்குவதற்கு ஆதாரமாயுள்ள கிணறு, குளம், குட்டை முதலியவைகளையெல்லாம் தூர்த்து, நூதனமாகக் குழாய்த் தண்ணீர் வேண்டிய வளவு விடவேண்டுமென்றும் கூறுகிறார். இப்பொழுது ஜார்ஜ் டவுன் முதலிய விடங்கள் இவ்வித சீர்திருத்தம் செய்வதற்கு மிகவும் ஏற்றதாயிருக்கும். இப்பொழுது இந்தியாவில் அனேகம் பிராந்தங்களிலும், விசேஷமாக சென்னை ஜார்ஜடவுனிலும் விஷஜ்வரம் முதலியவற்றைப் பரவச்செய்யும் ஸ்டெகோமியா (Stegomyia) என்கிற கொசு ஜாதிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இவ்வித ஏற்பாடு மிகவும் அவசியமானதே.

H. E. THE GOVERNOR'S VISIT TO THE MADRAS AYURVEDIC COLLEGE.

சென்னை ஆயுர்வேத காலேஜில் கவர்னரின் விஜயம்.

ஆயுர்வேத காலேஜில் நடைபெறும் விஷயங்களை அறிவதில் விருப்பங்கொண்டு மஹாகனம் பொருந்திய கவர்னர் லார்ட் பெண்ட்லண்ட் அவர்கள் இந்த மாதம் 14-ம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மேற்படி காலேஜுக்கு விஜயம் செய்தார்கள். காலேஜ் ப்ரின்ஸிபாலான ஸ்ரீமான் வைத்தியரத்ன பண்டித D. கோபாலாசாரியர், கமிட்டி மெம்பர்களான திவான்பகதூர் P. இராஜரத்ன முதலியார், திவான்பகதூர் K. கிருஷ்ணஸ்வாமிராவ் C. I. E., காலேஜ் ப்ரொபஸர்களான டாக்டர் M. சுப்பிரமணியஐயர், B.A. M.B. &. C.M., ஆயுர்வேத பூஷண பண்டித M. துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷண C. பானு இவர்கள் கவர்னரை காலேஜின் வாயிலிலிருந்து கொண்டு வர வேற்றார்கள். பிறகு காலேஜின் ஔஷதசாலைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார். அங்கு பலவிதமான ஔஷதங்கள் காட்டப்பட்டன. ஒவ்வொரு ஔஷதமும் தயார் செய்யப்படும் மாதிரியும், அவற்றை உபயோகிக்கும் விதமும், அவற்றின் குணாதிசயங்களும் கவர்னரவர்களுக்கு விவரித்துக் கூறப்பட்டன. ஒவ்வொன்றையும் காண்பிக்கும்போது ஊக்கத்துடன் கவனித்து "மிகவும் விருப்பத்தக்கது, மிகவும் விருப்பத்தக்கது, very interesting very interesting" என்று மொழிந்து வந்தனர். அப்பால் ஔஷதச் சரக்குகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களையும் மாணாக்கருக்கு சாஸ்திரம் கற்பிக்கப்படும் க்ளாஸுகளையும், புஸ்தகசாலையையும் பார்வையிட்டார். புஸ்தகசாலையில் ஓலையில் எழுதிய பிராசீன புஸ்தகங்களையும், மற்றும் வைத்திய நூல்களையும் பார்த்து மகிழ்வுற்றார். அப்பால் கலாசாலையின் வித்தியார்த்திகளைப் பார்த்து 'நீங்களெல்லோரும் இப்படிப்பினால் நற்பயன் அடைவதுடன் ஜனங்களுக்கும் நற்பயன் விளைவிப்பீர்கள் என்று நம்புகிறேன்; உங்களைக் கடவுள் ஆசிர்வதிப்பாராக' என்று ஸந்தோஷத்துடன் வாழ்த்து கூறினார். பிறகு, காலேஜ் விஸிடர்ஸ் புஸ்தகத்தில் அடியில் வருமாறு தமது அபிப்பிராயத்தை எழுதினார்:—"இந்த காலேஜை நான் வந்து பார்வையிட்டதில் வெகு ஸந்தோஷப்படுகிறேன்; இங்குள்ள ஏற்பாடுகளெல்லாம் விரும்பத்தக்கவைகளாயிருக்கின்றன. காலேஜில் சாஸ்திராப்யாஸத்திற்கு வேண்டிய விஷயங்கள் நன்கு அமைந்திருக்கின்றன. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மாணாக்கர்கள் இங்கு சாஸ்திரம் கற்பதற்கு வந்திருப்பது இக்கலாசாலையின் மேன்மையை அறிவிக்கின்றது." என்று எழுதியதும் பூமாலையிடப்பட்டது. இவ்வாறு ஒரு மணி ஸாவகாசம் பார்வையிட்டு ப்ரின்ஸிபால் ப்ரொபஸர்கள் இவர்களையெல்லாம் கைகுலுக்கி ஆமோதித்து விட்டுத் திரும்பினார். சென்னையில் ஸ்ரீ பண்டித D. கோபாலாசாரியருடைய பெருமுயற்சியினால் இக்கலாசாலை நடந்து வருகிறது. இப்பொழுது ஆயுர்வேத வைத்தியர்கள் ஒரு விதமாக சாஸ்திரப் பயிற்சி பெறுவதற்கு இது இன்றியமையாததாயிருக்கின்றது. இந்தியாவில் ஆயுர்வேத வைத்தியர்களாலேயே பெரும்பான்மையான ஜனங்கள் வைத்திய உதவியைப் பெற்று வருகிறார்கள் ஆகையால் இவ்வைத்திய கலாசாலையில் மாணாக்கர் வேண்டியவளவு படித்து ஒவ்வொருக் கிராமத்திலும் சென்று வைத்தியம் செய்யுமாறு தகுந்த ஏற்பாடுகள் இக்கலாசாலை மூலமாக செய்யப்படுவதற்கு இனியாவது கவர்ன்மெண்டார் சிறிது முன்னுக்கு வருவார்களென்று நம்புகிறோம்.

AN AYURVEDIC AND UNANI MEDICAL COLLEGE AT DELHI.

டெல்லியில் ஓர் ஆயுர்வேத யூனனி வைத்திய கலாசாலை.

டெல்லியில் ஒரு ஆயுர்வேத யூனனி வைத்தியகலாசாலை ஸ்தாபிக்க ஏற்பாடு நடந்து வருவதாகவும், அதற்காக அனேக கனவான்களும் பிரபுக்களும் ஆயிரக்கணக்காகத் திரவிய ஸஹாயம் செய்ய முன்வந்திருக்கிறார்களென்றும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். நடந்துவரும் முயற்சிகளை ஆலோசித்தால், அக்கலாசாலையானது பல வகையிலும் நவீன நாகரிகத்தையும், இந்திய நாட்டிலுள்ளப் பிராசீன வைத்திய சாஸ்திரங்களின் முற்போக்கையும், சாஸ்த்ரீயமான ஆராய்ச்சி முறைகளுக்கு வேண்டிய வழிகளையும் அனுஸரித்து வெகு சீர்திருத்தங்களுடன் கூடியதாகவே ஏற்படுத்தப்படப்போவதாய் அறிகிறோம். இந்தியாவுக்கு எவ்விதத்திலும் புதிய மஹாராஜதானியாக ஏற்பட்டு, இத்தேசத்திற்கு மத்திய மணிபோல் விளங்கும் டெல்லியில் ஒரு ஆயுர்வேத யூனனி கலாசாலையைப் பல விதத்திலும் சிறப்புடன் ஸ்தாபிப்பதற்கு முன்வந்த மஹான்களிடத்தில் இந்திய நாட்டிலுள்ள எல்லா ஜனங்களும், முக்கியமாக ஸகல ஆயுர்வேத யூனனிவைத்தியர்களும் எக்காலமும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஸமீபத்தில் லக்னௌநகரத்தில் ஐக்கிய மாகாண லெப்டினண்ட் கவர்னரின் தலைமையின் கீழ் மேற்படி கலாசாலை ஸ்தாபனத்தைப் பற்றி ஒரு மீடிங் நடந்ததென்றும், அந்த மீடிங்கில் காலேஜ் கட்டடத்திற்காக டெல்லியில் கவர்ன்மெண்டார் காலிநிலம் கொடுத்துதவ இசைந்திருக்கிறார்களென்றும், அக்கலாசாலைக்கு வேண்டிய கட்டடங்களுக்கு மட்டும் சுமார் ஆறு லக்ஷம் ரூபாய் செலவாகுமென்றும் தெரியவருகிறது. இக்கட்டடத்திற்காக இப்பொழுது கையிருப்புத் தொகையும், ராம்பூர் நவாப் அவர்கள் கொடுப்பதாய் வாக்களித்திருக்கிற நன்கொடையும் போக, பாக்கி வேண்டியிருக்கும் தொகையைச் சேகரிப்பதற்காக ஒரு விசேஷக் கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அக்கலாசாலையில் ஆயுர்வேத யூனனி வைத்திய சாஸ்திரங்களை முறைப்படி போதிப்பதற்கும், அனுபவரீதியான அறிவை அனேகவிதமானப் பிரத்தியக்ஷப்பிரமாணங்களையும் யந்திரசஸ்திரங்களையும் கொண்டு கற்பிப்பதற்கும் தகுந்த முக்கியமான எல்லா ஏற்பாடுகளையும் செய்யப்போவதுடன், மாணாக்கருடைய ஸௌகரியங்களைக் கருதி ஒரு சிறந்த ஹோஸ்டலும் கட்டிவிடப்படும்; அதற்கு "ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் ஹோஸ்டல்" எனப் பெயரிடப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இப்பொழுது இந்தியாவில் மேல் நாட்டு வைத்தியமே மேம்பாடடைந்து, இராஜாங்கத்தாராலும், ஆடம்பரங்களைக் கண்டு மயங்கும் பொது ஜனங்களாலும் அம்முறையே ஆதரிக்கப்பட்டு வருவதால், ஆயுர்வேத யூனனி வைத்தியமுறைகள் அடியோடு அழியத்தலைப்பட்டன; ஆகிலும் இதில் எமக்கு வியப்பில்லை; ஆனால் நமது இந்திய வைத்தியர்கள் உலகத்தில் முற்போக்குக்கு வேண்டிய முயற்சிகளில் கருத்துவைக்காமல், அவ்வித முயற்சிகளாலுண்டாகும் மஹத்தான இலாபங்களையுணராமல், வீணில் தமக்குள் தாமே பொறாமை மேலிட்டு ஒற்றுமையிழந்து அவ்விதம் நமது பிராசீனமான அரிய வைத்தியமுறைகள் அழிவதற்கு இடங்கொடுத்து வருவதைக் கண்டுதான் நாம் மிக வியப்புற்று வருந்த வேண்டியிருக்கிறது. இப்பொழுது நமது வைத்தியமுறைகளுக்குள்ள பிற்போக்கைப் பார்த்தால், டெல்லி ஆயுர்வேத யூனனி வைத்திய கலாசாலையைப் போல் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு வைத்திய கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு, நமது வைத்தியர்களுக்கும் பரஸ்பரம் ப்ரீதிமேலிட்டு அவர்கள் ஒற்றுமையுடன் உழைக்க முன் வந்தாலன்றி நமது வைத்தியமுறைகள் சிறிதேனும் சீரடைய வழியில்லையென்று நிச்சயிக்கிறோம். ஆங்கில வைத்தியர்கள் அளவற்ற செல்வாக்குடையவர்களாயிருந்தும், இன்னும் அவர்கள் ஆசைமேலிட்டு எல்லாவிதமான சுதந்திரங்களையும் ஸௌகரியங்களையும் பெற பேராசையுடன் முயல்வதற்கு அவர்களிடமுள்ள ஒற்றுமையும் பெருமுயற்சியுமே காரணங்களாகும். ஆங்கில வைத்தியர்களுடைய செல்வாக்கை அதிகப்படுத்த ஒவ்வொரு மாகாணத்திலும் கிரமமாக வைத்தியப் பதிவு மஸோதாவும் கொண்டு வரப்பட்டு, அம்முயற்சியை நிறைவேற்றுவதற்கும் இராஜாங்கத்தார் தயாராயிப்பதைப் பார்த்து வருகிறோமல்லவா? இனியாவது இந்திய வைத்தியர்கள் ஒற்றுமையுடன் உழைத்து டெல்லியில் ஸ்தாபிக்கப்படும் கலாசாலையைப் போல், ஒவ்வொரு மாகாணத்திலும் ஆயுர்வேத யூனனி வைத்திய கலாசாலைகள் ஸ்தாபிப்பதற்கும், எல்லாவைத்தியர்களும் சேர்ந்து ஆயுர்வேத யூனனி ஔஷதங்களை முறைப்படி தயார் செய்வதற்கு ஒருபெரிய ஔஷதசாலை ஏற்படுத்துவதற்கும், மற்றும் வைத்தியாபிவிருத்தி விஷயமான காரியங்களைச் செய்யவும் முன்வர வேண்

THE MEDICAL REGISTRATION BILL

வைத்தியப்பதிவு மஸோதா.

ஆனரபில் டாக்டர் டி. எம். நாயர் கொண்டு வந்துள்ள வைத்தியப்பதிவு மஸோதாவைப்பற்றி சென்னை சட்ட ஸபையில் சென்ற 27, 28-ந்தேதிகளில் வாதம் நடந்தது. அப்போது அந்த மஸோதாவைப்பற்றிய விவரங்களை அவர் பின்வருமாறு எடுத்துச்சொன்னார்.

"ஐரோப்பிய முறையில் வைத்தியத் தொழில் செய்பவர்களைப் பதிவு செய்து ஒழுங்காய் அவர்கள் நடந்து கொள்ளும்படி செய்வதற்காக இந்த மஸோதா ஏற்பட்டிருக்கிறது. இதிற் கண்டுள்ள விஷயங்களை நான்கு பாகங்களாகப் பிரித்து ஆலோசனை செய்யலாம். (1) மெடிகல் கவுன்ஸில் என்ற ஸங்கத்தை ஸ்தாபித்தல், (2) வைத்தியத் தொழில் செய்பவர்களின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கு அந்தக் கவுன்ஸிலுக்கு அதிகாரம் கொடுத்தல், (3) வைத்தியத் தொழிலுக்குப் படிப்பவர்களை பரீக்ஷை செய்யும் ஸங்கத்தாருக்கும், மெடிகல் கவுன்ஸிலுக்குமுள்ள ஸம்பந்தத்தை நிர்ணயித்தல், (4) சென்னை கவர்ன்மெண்டாருக்கு முடிவான அதிகாரம் கொடுத்தல்.

"இந்த மஸோதாவின்படி, மெடிகல் கவுன்ஸிலுக்கு முக்கிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது நன்கு விளங்கும். மெடிகல் கவுன்ஸிலைச் சேர்ந்தவர்கள் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாயிருந்தால் ஸொந்தத்தில் வைத்தியத்தொழில் நடத்துபவர்களை இம்ஸித்து வருவார்களென்று ஒரு அபிப்பிராயம் இருந்துவருகிறது. மெடிகல் கவுன்ஸிலில் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களும் இருப்பார்களானாலும், அவர்களைவிட கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களே அதிகமாயிருப்பார்களென்பது உண்மையே. அவர்கள் அதிகாரத்தைத் தகாத வழியில் உபயோகிப்பார்களென்று நினைப்பது சரியல்ல. எந்த ஸங்கத்திலும் எல்லா கக்ஷிகளுக்கும் மெஜாரிடியிருப்பது ஸாத்தியமல்ல. ஏதாவதொருகக்ஷிக்கு மெஜாரிடியிருக்கவேண்டுமாகையால், இந்தியவின் தற்கால நிலைமையில் கவர்ன்மெண்டாருக்கே மெஜாரிட்டி இருக்க வேண்டும். மெடிகல் கவுன்ஸிலின் நடவடிக்கைகளைச் சரியானவழியில் செலுத்தவும் மேற்பார்வை பார்க்கவும் கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். பம்பாயில் அம்மாதிரியான மெடிகல் கவுன்ஸில் இருந்து வருகிறது. அங்கு கவர்ன்மெண்டார் நியமனஞ் செய்யும் அதிகாரத்தை மிதமாய் உபயோகித்து வருகிறார்கள்.

"பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை பார்ப்பதற்கு மெடிகல் கவுன்ஸில் அதிகாரம் பெற்றிருக்கிறது. வைத்தியரைப் பதிவு செய்ய மறுத்துவிடுவதற்கும், பதிவு செய்யப்பட்டவர்களைப் பிறகு நீக்கி விடுவதற்கும், கவுன்ஸில் அதிகாரம் பெற்றிருக்கிறது. மெடிகல் கவுன்ஸில் கொடுக்கும் தீர்ப்பின்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யும் அதிகாரம் வைத்தியர்களுக்கிருக்க வேண்டுமென்று சிலரால் சொல்லப்பட்டது. ஆனால் இங்கிலாந்திலிருக்கும் இம்மாதிரியான சட்டத்தில் கண்டிருக்கிறபடி, மாகாண கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்ய வேண்டுமேயொழிய ஐகோர்ட்டுக்கு அப்பீல் கொண்டு போகக் கூடாதென்று இந்த மஸோதாவிலும் விதித்திருக்கிறது. ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யக்கூடாதென்றதற்குக் காரணம், இங்கிலாந்திலிருக்கும் முறையை அனுஸரிப்பதாயிருப்பதோடு கூட, பதிவு செய்யப்படும் வைத்தியர்கள் பெரும்பாலும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகையால் அவர்கள் மாகாண கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்வதே ஸௌகரியமாயிருக்கும். மெடிகல் கவுன்ஸிலால் நீக்கப்பட்ட வைத்தியர் கவர்ன்மெண்டு உத்தியோகத்தையும் இழந்துவிடுவாராதலால், மாகாண கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்ய அதிகாரம் பெறுவது அவசியமாகும்.

"வைத்திய பரீக்ஷை செய்யும் ஸங்கங்களுடன் அல்லது யூனிவர்ஸிடியுடன் மெடிகல் கவுன்ஸிலுக்கு யாதொரு ஸம்பந்தமும் வைக்கப்படவில்லை. அவ்விஷயத்தில் மெடிகல் கவுன்ஸிலுக்கு மேலதிகாரமிருப்பதாகச் சிலர் நினைப்பது பிசகு. வைத்தியப்படிப்பு சரியானபடி கற்பிக்கப்படுகிறதாவென்பதை மெடிகல் கவுன்ஸில் கவனித்து தம் அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டுக்கு அறிவிப்பதற்கு மாத்திரம் அதிகாரம் பெற்றிருக்கிறது.

"இந்த மஸோதாவிலுள்ள நமூனாவை மாற்றும் அதிகாரம் மாகாண கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வைத்தியரைப்பதிவு செய்து கொள்வதற்கு அவசியமென்று விதிக்கப்பட்டுள்ள யோக்கியதாம்சங்கள் பின்னர் மாற்றும்படியாயிருக்கலாம். சில ஸமயங்களில் பரீக்ஷைப்பட்டங்களைக் கவனியாமல், மற்றப்படி தக்கவர்களென்று கருதப் படுகிறவர்களைப் பதிவு செய்ய மாகாண கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகள் இந்த மஸோதாவால் பாதிக்கப்படாமலிருப்பதைப்பற்றி

ஒரு ஜெனரல் கிளாஸில் விவரமாய்க் கண்டிருக்கிறது. ஆகையால் மஸோதாவின் பீடிகையில் அவ்விஷயமாய் எதுவும் சொல்லப்படவில்லை."

ஆனரபில் டாக்டர் நாயர் மேற்கண்ட விவரங்களைச் சொல்லி முடித்ததும், அநேக மெம்பர்கள் திருத்தப் பிரேரணைகள் செய்தார்கள். அவைகளில் இரண்டொன்றைத் தவிர மற்ற முக்கியமானவை அனைத்தும் நிறைவேறவில்லை. ஆயினும் முக்கியமாயுள்ளவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம். கவர்ன்மெண்டின் கீழ் உத்தியோகத்தி லில்லாத வைத்தியர்களிற் சிலர் மெடிகல் கவுன்ஸிலில் பிரதிநிதிகளாக ஸ்தானம் பெறவேண்டுமென்று ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரி ஒரு திருத்தங் கொண்டுவந்தார். மாகாண கவர்ன்மெண்டுக்கு முடிவான அதிகாரமும் அப்பீல்களை விசாரிக்கும் அதிகாரமும் இருக்கிறபடியால் மெடிகல் கவுன்ஸிலில் கவர்ன்மெண்டு மெஜாரிட்டி யிருக்க வேண்டியதில்லை. மேலும் வோட்டு கொடுப்பவர்கள் பெரும்பாலும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாகையால் கவர்ன்மெண்டுக்கு எப்போதும் மெஜாரிட்டி கிடைக்கும். இந்த மஸோதா இப்போதிருக்கிறபடி ஸொந்தத்தில் வைத்தியஞ் செய்பவர்கள் எவரும்தெரிந்தெடுக்கப்படாம லிருக்கக்கூடும். கவர்ன்மெண்டு உத்தியோகத்திலிருக்கும் வைத்தியர்களுக்கும் ஸொந்தமாய்த் தொழில் நடத்தும் வைத்தியர்களுக்கும் சில ஸமயங்களில் வேறுபாடு உண்டாகிறதென்று பலமான அபிப்பிராயமிருந்து வருகிறது. ஆகையால், வைத்தியரின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை செய்யும் மெடிகல் கவுன்ஸிலில் ஸொந்தத்தில் வைத்தியஞ் செய்பவர்களின் கக்ஷியை எடுத்துப் பேசி அந்த விசாரணையில் கலக்கும் பொருட்டு அவர்களைச் சேர்ந்த சில பிரதிநிதிகள் நியமிக்கப்படவேண்டும்.

இந்நோக்கத்துடன் அநேக ஆனரபில் மெம்பர்கள் திருத்தங்கள் பிரேரித்தும் நிறைவேறவில்லை. வைத்தியத்தொழிலில் உத்தியோகஸ்தரென்றும் அல்லாதவரென்றும் வேறு பாடிருப்பதாகச் சொல்வது கற்பனையென்று கவர்ன்மெண்டு தரப்பில் சொல்லப்பட்டது. கவர்ன்மெண்டு உத்தியோகத்தி லிருப்பவர்களாயினும் அவர்கள் மற்ற வைத்தியர்களின் க்ஷேமத்தை அக்கறையாய் கவனிப்பார்களென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டதானது ஆனரபில் மெம்பர்கள் சொன்னதற்கு நேர் விரோதமாயிருக்கிறது.

மற்றொரு முக்கியமான திருத்தப் பிரேரணை கவனிக்கத்தக்கது. இந்தியர்கள் குடியேறுவதைத் தடை செய்யும் அந்நிய நாடுகள், அல்லது பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் இவைகளைச் சேர்ந்தவர்களாயிருக்கும் இந்தியரல்லாத எவரையும் பதிவு செய்து கொள்ளக் கூடாதென்று ஆனரபில் மிஸ்டர் சர்மாவும், ஆனரபில் மிஸ்டர் நரசிம்ம அய்யரும் திருத்தப் பிரேரணைகள் செய்தார்கள். சட்டஸபை பிரஸிடெண்டாகிய H. E. கவர்னர் அந்த பிரேரணை மஸோதாவில் கண்ட விஷயத்திற்கு யாதொரு விதமாயும் ஸம்பந்தப்பட்டிருக்கவில்லையென்றும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுடன் இந்தியரைப்பற்றிப் பேச்சுகள் நடந்துவருகிற இச்சமயத்தில் சட்டஸபையில் விவாதம் நடத்துவது சரியல்லவாகையால், அந்தத் திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவர வேண்டாமென்று தாம் கேட்டுக் கொள்வதாகவும் சொன்னார். ஒரு குறித்த வகுப்பார் இந்த மஸோதாவின்படி பதிவு செய்யப்பட்டு அதன் பலன்களை அனுபவிக்க உரிமை கொண்டவர்களா, என்னும் விஷயமாய் விவாதஞ் செய்வதில் யாதொரு ஆக்ஷேபமும் தோன்றவில்லையாதலால், அவ்வாறு பிரேரணை செய்வது தம்முடைய கடமையாகுமென்று ஆனரபில் மிஸ்டர் சர்மா சொன்னார். அந்த பிரேரணையைக் கொண்டு வரக்கூடாதென்று பிரஸிடெண்டு தடுத்து விட்டார்.

மெடிகல் கவுன்ஸில், வைத்தியரின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை நடத்தி, தண்டனை விதிக்க அதிகாரம் பெற்றிருக்கிறது. வைத்தியரின் பெயரை ரெஜிஸ்தரிலிந்து நீக்கிவிடலாம். வைத்தியர் கவர்ன்மெண்டு உத்தியோகத்தை வகித்திருந்தால் அதையும் இழந்துவிடக்கூடும். வைத்தியத் தொழில் ஸம்பந்தமான குற்றங்களை மெடிகல் கவுன்ஸில் விசாரிக்கலாமென்றும், நன்னடத்தைக்கு விரோதமாயுள்ள குற்றங்களை ஐகோர்ட்டாரே விசாரிக்க வேண்டுமென்றும் திருத்தப் பிரேரணை செய்யப்பட்டுத் தள்ளிவிடப்பட்டது. ஆகையால் எல்லாவிதமான குற்றங்களையும் மெடிகல் கவுன்ஸில் விசாரணை செய்யும். அப்பீல்களைக் கவர்ன்மெண்டார் விசாரிப்பார்கள். வைத்தியரல்லாத ஸாதாரண ஜனங்கள் ஐகோர்ட்டுக்கு அப்பீல் செய்யும் சுதந்தரம் பெற்றிருப்பதை வைத்தியர்கள் இழந்து விட்டார்கள். கவர்ன்மெண்டார் செய்யும் விசாரணைகளில் இரண்டு கக்ஷியையும் நேரக்கேட்கும் வழக்கமில்லாததோடு உத்தியோக முறையில் கிடைக்கும் இரஹஸ்ய ரிகார்டுகளைப் பார்த்து அபிப்பிராயங் கொள்வது ஸஹஜமா யிருக்கிறபடியால், கவர்ன்மெண்டார், அப்பீல்களை விசாரிக்கக் கூடாதென்று பல ஆனரபில் மெம்பர்கள் எடுத்துக்காட்டியது முற்றிலும் சரியென்றே நினைக்கிறோம். இந்தப் பிரேரணைகளெல்லாம தள்ளிவிடப்பட்டபடியால், வைத்தியப்

பதிவு மஸோதா முதலில் கொண்டு வரப்பட்டபடியே அடுத்த மீட்டிங்கில் நிறைவேறி விடுமென்று தோன்றுகிறது.

GOAT'S MILK FOR INFANT FEEDING

குழந்தைகளுக்கு வெள்ளாட்டுப் பாலூட்டல்.

பிராசீன ஆயுர்வேத நூல்களில் வெள்ளாட்டுப் பால் குணங்களால் மிகவும் சிறந்ததென்று கூறப்பட்டிருக்கிறது. வாக்படன் இயற்றிய "அஷ்டாங்கஹ்ருதயம்" என்கிறக் கிரந்தத்தில் "அல்பாம்பு பாநவ்யாயாமகடுதிக்தாசநைர் லகு! ஆஜம் சோஷஜ்வரச் வாஸ ரக்த பித்தாதி ஸாரஜித்" என மொழியப் பட்டிருக்கிறது; இந்த ச்லோகத்திற்குப் பொருள் என்னவென்றால்.—வெள்ளாடானது காரம், கசப்பு முதலிய பற்பல சுவையுள்ளவையும், எளிதில் ஜீர்ணமாகக்கூடியவையுமான சிறந்த உணவுகளை மிதமாக மேய்ந்து, தண்ணீரையும் சொற்பமாகக்குடித்து, ஓடித்திரிவதால், அதன் பாலானது சீக்கிரத்தில் ஸுலகமாக ஜீர்ணமாகக் கூடியதுடன், க்ஷயரோகம், ஜ்வரம், ச்வாஸகாஸம், இரத்த பித்தம், அஜீர்ணபேதி இவற்றைப்போக்கும். ஸுச்ருத ஸம்ஹிதையில் ஸூத்ரஸ்தானம் 45-வது அத்தியாயத்தில் கூறப்படுதாவது:— "வெள்ளாட்டுப்பாலுக்கும் பசும் பாலுக்குள்ள எல்லா குணங்களும் இருப்பதுடன், அவை உடல் சிறுத்து, காரம் கசப்பு முதலிய பல சுவையுள்ள உணவுகளை மிதமாக உண்பதாலும், மிதமாக நீரைப் பருகுவதாலும், ஓடித்திரிவதாலும் அவற்றின் பாலுக்கு பசும் பாலுக்கில்லாத வேறு விசேஷ குணங்களுமுண்டு; அவையாவன,— பசிதீபன முண்டாகும், எளிதில் ஜீர்ணமாகும், அஜீர்ணத்தைப் போக்கி அஜீர்ண பேதியைக்கட்டும்,ச்வாஸ காஸம், இரத்த பித்தம இவற்றைப் போக்கும்; க்ஷய ரோகிகளுக்கு ஹிதமாயிருப்பதே இதற்குண்டான விசேஷ குணமாகும்." இது மாத்திரமல்ல, இன்னும் அநேக ஆயுர்வேத நூல்களில் இதைப்பற்றி மிகவும் புகழ்ந்தே கூறப்படுகிறது.

அமெரிகா முதலிய நாடுகளில் இப்பொழுது வெள்ளாட்டுப் பாலைப்பற்றி பற்பல பரிசோதனைசெய்ததில் குழந்தைகளுக்கு சீக்கிரம் ஜீர்ணமாகக் கூடிய உணவு இதுதான் என்றும், பசுக்களுக்கு க்ஷயரோக முண்டாவதால் அவற்றின் பாலைக் குழந்தைகளுக்குக் கண்டபடி உபயோகிப்பது பிசகென்றும், வெள்ளாடுகளுக்கு அவ்வாறு க்ஷயரோகம் உண்டாவதில்லை யென்றும், பண்டைக்காலத்தில் வெள்ளாட்டுப்பாலையே விசேஷமாக சில தேசத்து ஜனங்கள் உபயோகித்து வந்ததற்குக் காரணம் இது வாகத்தான் இருக்கவேண்டுமெனவும், ஆகவே குழந்தைகளுக்கு வேண்டியவளவு வெள்ளாட்டுப்பாலை உபயோகிக்க உபாயங்களைத்தேடி அவ்விதம் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் சில வைத்திய சிரேஷ்டர்கள் அபிப்பிராயப்படுவதாக 'பீடியாட்ரிக்ஸ்'(Pediatrics) என்கிற வைத்திய பத்திரிகை வெளியிடுகின்றது. இவ்விஷயம் இப்பொழுது அமெரிகாவில் நியூயார்க் என்கிற பட்டணத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. குழந்தைகளுக்கு வெள்ளாட்டுப்பாலை ஊட்டுவதால் குழந்தைகள் ஆரோக்கிய திடகாத்திரமாகச் செழித்து வளருமென்று நாம் அறிவோம். ஆயுர்வேதக் கிரந்தங்களில் இவ்விதம் பிரமாண மிருப்பதாகக் கூறுவதைவிட மேல்நாட்டு வைத்தியர்களின் ஆராய்ச்சியினால் அறியப்பட்ட விஷயத்தை எடுத்துக் கூறினால் இக்காலத்திய நவநாகரிகர்களுக்கு மேலான நம்பிக்கை யுண்டாகுமென்று நினைத்து 'பீடியாட்ரிக்ஸ்' பத்திரிகை கூறியதையும் எழுதலானோம். ஒரு மாட்டுக்குச் செலவாகும் தீனியை, மூன்று அல்லது நாலு ஆடுகள் பூர்ணமாக உபயோகிப்பதுடன், ஒரு பசுவினிடமிருந்து கிடைக்கும் பாலைவிட அவற்றினிடமிருந்து அதிகம் கிடைக்குமென்றும், ஆகவே குணத்தில் சிறந்ததும், விலையில் குறைந்தது மாயிருக்கும் வெள்ளாட்டுப்பாலையே குழந்தைகளுக்கு உபயோகிக்கலாமென்றும் கூறுகிறது.

CORRESPONDENCE.

கடிதங்கள்.

KUMBAKONAM INDIAN MEDICAL ASSOCIATION.

கும்பகோணம் இந்திய ப்ராசீன வைத்திய ஸமாஜம்.

கும்பகோணத்தில் பொது நன்மையில் அபிமானமுள்ளப் பிரபுக்களின் ஆதாரணையின் கீழ், அநேக வைத்தியர்களும் பிரமுகர்களும் சேர்ந்து, "இந்திய ப்ராசீன வைத்திய ஸமாஜம்" என்று ஓர் ஸங்கத்தை 1913 ம் வருஷம் நவம்பர் மாஸம் 26 தேதி ஸ்தாபித்தனர். ஆயுர்வேத யூனானிவைத்தியசாஸ்திர முறை

களை இயன்ற வரையில் விருத்தி செய்வதும் ஆதரிப்பதும் இந்த ஸங்கத்தின் உத்தேசமாகும். அதாவது சாஸ்திர ஆராய்ச்சி, சுகாதாரம், தேஹதத்துவம், ரோகயின் கூறுபாடுகள், ஔஷதம்செய்யும்முறைகள்முதலியவைகளைத்தெரிந்தவர்கள் வைத்தியம் கற்கவிரும்புபவருக்குத் தகுந்தவாறு போதிப்பதும், ஆயுர்வேதயூனானி வைத்தியங்களை முன்னுக்குக் கொண்டு வருவதுமே இதன் கருத்தாகும். மேற்கண்டஸங்கத்தில் ஆயுர்வேத யூனானி வைத்தியர்கள் மெப்பர்களாகச் சேரலாம். இந்தஸங்கத்தில் ஆங்கில ஆயுர்வேதயூனானிவைத்திய சாஸ்திரங்களை ஒன்று சேர்த்து எல்லா வைத்தியர்களும் வந்து தினந்தோறும் சாஸ்திர ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஒரு புஸ்தகசாலை திறக்கப்பட்டிருக்கிறது. இதில் இன்னும் அவசியமான அநேக அரிய சாஸ்திரங்களும் சேர்த்து வைக்பகப்படும்.

இதன்றியில் இந்த ஸங்கத்தில் ஓர் வைத்திய பாடசாலை ஏற்படுத்தப்பட்டு, அதில் இங்கிலீஷ் ஆயுர்வேத யூனானி வைத்திய சாஸ்திரங்கள் தமிழிலேயே மாணாக்கர்களுக்கு இலவசமாய் கற்பிக்கப்படுகின்றன. இவற்றிற் கெல்லாம் தனித்தனி உபாத்யாயர்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

தகுந்த அநேக பிரபுக்கள் இந்த ஸங்கத்துக்கும், இதன் ஸம்பந்தமான புஸ்தகசாலைக்கும், பாடசாலைக்கும் பேஷகர்களாக இருந்து, வேண்டிய உதவிபுரிவதாய் வாக்களித்திருக்கிறார்கள். இன்னும் நமது தேச அரசர்களும் மடாதிபதிகளும் ஜமீன்தார்களும் தனதனவான்களும் நமது ஆயுர்வேத யூனானி வைத்தியங்களை ஆதரித்துப் புகழையும் புண்ணியத்தையும் பெற முன்வருவார்களென எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்,
ஸீதாராம வைத்தியர்,
K. S. துரைஸாமி பண்டிதர்.
காரியதர்சிகள்.

DRUGS AND MEDICINES.

ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

முள்ளுக்கீரை.

தென்னிந்தியாவில் இந்த ஒஷதியானது எங்கும் விஸ்தாரமாய்க் கிடைக்கும். ஆனால் இதனாலுண்டாகும் பிரயோஜனத்தை அறிந்தவர் மாத்திரம் அரிது. இது ஆபத்திற்குதவும் ஒஷதி. ஸர்ப்பம் கடித்தாலும், தேள் கொட்டினாலும் மேற்படி ஒஷதியை ஸமூலமாக இடித்து, இரஸம் பிழிந்து, வடிக்கட்டி உடனே முதல் 1-ஆழாக்கு வரையில் குடிக்கச் செய்வதால் நற்குணமுண்டாகும். பாம்பின் விஷத்திற்கு வாழைத்தண்டின் இரஸமும் முள்ளுக்கீரையின் இரஸமும் அனுபவத்தில் வந்த மிகவும் சிலாக்கியமான ஔஷதங்களென்று நிபுணரான வைத்தியர்களின்கொள்கை. முள்ளுக்கீரைச் சாற்றையும் வாழைத்தண்டின் சாற்றையும் ஸம எடையாகக் கலந்தும் உட்கொள்ளச் செய்யலாம். இக்கீரையின் வேர் 1-பலம் எடுத்து அத்துடன் ¼ பலம் ஓமமும், ஒரு வெள்ளுள்ளியும் வைத்து அரைத்து உட்கொண்டால், இதர ஔஷதங்களால் குணமாகாத வயிற்றுவலியும் சில ஸமயம் குணமாவதுண்டு. இந்த வேரை 2-பலம் இடித்துச் சேர்த்துக் கஷாயமிட்டு வடிக்கட்டி 1-முதல் 2-அவுன்ஸ் வரையில் தினத்திற்கு மூன்று வேளை உட்கொண்டால் வெள்ளை யென்னும் மேஹரோகம் வெகு சீக்கிரத்தில் தீரும்; மூத்திரம் கட்டியிருப்பவருக்கு மேற்படி கஷாயம் நல்ல குணம் தரும்.

ஆடா தோடை.

குளிர் காலங்களில் செழித்து வளரக்கூடியதும் எங்கும் பிரவித்தமுமான ஒரு சிறந்த ஒஷதி. சேதனம் (Expectorant) என்கிற மார்ச் சளியைப் போக்கும் குணமும், வாதஹரம் (Antispasmodic) என்கிற குணமும் இதற்குண்டு. ஆகையினால் க்ஷய ரோகிகளுக்கும், ஸாதாரண இருமலால் கஷ்டப்படுபவருக்கும் இதன் ஸ்வரஸத்தை ஆயுர்வேத வைத்தியர்கள் உபயோகித்து, அவ்வித ரோகிகளுக்கு விசேஷ குணத்தை உண்டாக்கியிருக்கின்றனர். கபஜ்வரத்தில், இவ்விலையை புடபாகம் செய்து (புட்டுவைக்கிறது என்று ஸாதாரணமாய்ச் சொல்வதுண்டு), அந்த இரஸத்தைப் பிழிந்து வடிக்கட்டி 2-அல்லது 3-பலம் இரஸம் எடுத்துக்கொண்டு, ½ தோலா எடை மிளகைப் பொடித்து அத்துடன் சேர்த்து உட்கொள்ளலாம். இவ்விதம் தினத்திற்கு இரண்டு மூன்று தடவை உபயோகிக்க ஜ்வரமும் கபமும் குறையும். பானம் பண்ணும் ஜலத்திலுள்ளக்கிருமிகளால் கெடுதியுண்டாகும் போது, ஆடாதோடையைக் கஷாயமிட்டு உட்கொண்டால் அக்கிருமிகள் அழிந்து விடுமென்று வெகு ஸமீபகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

அம்ருத ஹரீதகீ.

ஹரீதகீ என்றால் கடுக்காய்; கடுக்காயை அடியில் கூறப்படும் விதமாய்ப் பக்குவம் செய்தால் எவ்வித அரோசகத்தையும் போக்கி உணவுகளில் ருசியை அதிகப்படுத்து மாகையால் இந்த முறை "அம்ருத ஹரீதகீ" என்று வழங்கப்படுகிறது. ஒரு வாயகன்ற பழைய மட்பாத்திரத்தில் இரண்டு அல்லது மூன்று படி மோரை விட்டு, ஒரு சல்லாத்துணியினால் அதன் வாயைக்கட்டி, அந்த வஸ்திரத்தின்மேல் 40-அல்லது 50 கடுக்காய்களைப் பரப்பி, அதன் மேல் மற்றொரு பாத்திரத்தை மூடி, அடியில் தீயிட்டு இரண்டுமணி ஸாவகாசம் எரித்து, அதன் பிறகு மேல்மூடியைத் திறந்து மோர்மூடிய ஆவியாகும் வரையில் பார்த்திருந்து பிறகு இறக்கி, அக்கடுக்காய்களிலிருந்து கொட்டையை மெதுவாகக் குடைந்தெடுத்து, கொட்டைகளை எறிந்து விட்டு மேல் தோலை வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு திப்பிலி, மோடி, சவ்யம், சித்திரமூலம், மிளகு, சுக்கு, இந்துப்பு, கறியுப்பு, சவுட்டுப்பு, யவக்ஷாரம், பெருங்காயம், ஓமம், ஜீரகம் இவை ஒவ்வொன்றும் 3-பலமும், கறுஞ்சிவதைவேர் 6-பலமும் சேர்த்து, சூர்ணம் செய்து வஸ்திரகாளிதம் பண்ணி இந்த சூர்ணத்தையும், பக்குவம் செய்து விதை போக்கிய கடுக்காய்கள் ஒவ்வொன்றிலும் மெதுவாக அடைத்து, ஒரு பழகிய மட்பாத்திரம் அல்லது பீங்கானில் போட்டு, எலுமிச்சம் பழரஸத்தை மேற்படி கடுக்காய்கள் அமிழ்ந்துபோகும் அளவாக விட்டு வெயிலில் வைக்கவேண்டும். இரஸமெல்லாம் வற்றிப்போன பிறகு, அக்கடுக்காய்களை ஒரு புட்டியில் போட்டு மூடி வைத்துக்கொண்டு, தினம் ஒன்றுக்கு இரண்டு மூன்று கடுக்காய் சாப்பிட்டு வரலாம். மலபந்தத்தைப் போக்குவதற்கும், நல்ல பசியை உண்டாக்குவதற்கும் இது மிகவும் சிலாக்கியமானது. வயிற்று வலி, கிரஹணீரோகம், மூலம், வயிற்றுப்பொருமல் இவைகளையும் குணப்படுத்தும். (யோக ரத்நாகரம்.)

ச்வாஸாசயக் கழலையும் பாஸ்வரமும்.

நியூயார்க் மெடிகல் ஜர்னலில் (New York Medical Journal) F. லெமன் என்கிற வைத்தியர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—"சென்ற பதினொரு வருஷகாலமாய் ச்வாஸாசயத்தைப்பற்றிய எல்லாவித ரோகங்களிலும் பாஸ்வரம் (Phosphorus) என்கிற நீமுறுகற் பாஷாணத்தை நான் உபயோகித்து வந்ததில் ரோகிகளுக்கு வெகு அநுகூலம் உண்டானதாகக் கண்டறிந்தேன். இச்சரக்கை உட்கொண்டால், இது நேராக ச்வாஸாசயங்களுக்குள் வேலை செய்யும் இயல்புடையதாயிருக்கிறது. கபவாதஜ்வரம் என்கிற அபிந்யாஸஜ்வரத்திலும் (Pneumonia), காஸரோகத்திலும் இதை பல முறை உபயோகித்து வந்து நற்குணமுண்டானதைக் கண்டு இவ்விஷயம் தீர்மானிக்கப்பட்டது. இதை உபயோகிப்பதால் ச்வாஸாசயமானது ரோகம் நீங்கி பலப்படுவது மாத்திரமேயல்ல; இதனால் சரீரம் முழுமையுமே வெகு வன்மையையும் ஆரோக்கியத்தையும் அடைகிறது. ச்வாஸாசயக்கழலையைப் போக்குவதிலும், தடுப்பதிலும் இச்சரக்குக்கு ஸமானம் வேறொன்று இல்லையென்றும் சொல்லலாம். எலும்புகளிலும், நரம்புமண்டலங்களிலும் (Nervous System) பாஸ்வரம் என்கிற பதார்த்தம் குறைந்து போவதாலேயே க்ஷயம் அல்லது கழலைரோகம் உண்டாகும்; அதற்காக பாஸ்வரத்தை முறைப்படி வேண்டிய அளவு உபயோகிப்பது அவசியம்".

விஸர்ப்பத்திற்கு ஆல்கோஹாலும் கார்பாலிக் ஆஸிட்டும்.

நியூயார்க்கிலுள்ள டாக்டர் ஆஸ்பின் வால்ஜட் என்பவர், அக்கினியென்னும் விஸர்ப்ப ரோகத்திற்கு அடியில் வரும் சிகித்ஸையினால் சிறந்த குணம் உண்டாவதாகக் கூறுகிறார்:—விஸர்ப்பம் உண்டாயிருக்கிற தோலின்மேல் கார்பாலிக் ஆஸிட்டை சிறிதளவு தடவி, சர்மம் வெண்மையாக ஆகும் வரையில் தேய்த்து, அதன்மேல் பிறகு ஆல்கொஹால் என்கிற சாராயத்தை விட்டு நன்றாகப் பூசவேண்டும். விஸர்ப்பத்தை புண்ணெண்ணும் விஷக்கிருமிகள் அழிய வேண்டுமாதலால், விஸர்ப்பமுண்டான இடங்களைச் சுற்றி அரை அங்குலம் வெளிப்புறத்திலும் ஆல்கொஹாலும் ஆஸிட்டும் படும்படியாகத் தேய்ப்பது அவசியம். பொறுக்கமுடியாத அரிப்பும், எரித்தலும், நோயும் உடனே நின்று விடும்; உடம்பின் தாபம் அல்லது ஜ்வரமும் சீக்கிரத்தில் உபசாந்தியடையும்; விஸர்ப்பத்திற்குள்ள மற்ற ஸாமானியக்குறிகளும் குணமாய் விடும். இதைக் கண்டறிந்த டாக்டர் இம்முறைப்படி 66-பெயருக்கு சிகித்ஸை செய்தார்; அவர்களுள் 5-பெயரைத் தவிர்த்து மற்ற 61 பெயருக்கும் நல்ல குணம் உண்டாயிற்று. பிறகு சர்மத்தில் தழும்புகள் இருந்த அடையாளமும் சிறிதும் காணப்படுவதில்லையாம். மேலேயிருக்கும் மெல்லிய தோல் உரிந்துபோய், பிறகு சுபாவமான தோல் வளர்ந்து விடுகிறது. (நியூயார்க் மெடிகல் ரிகார்ட்—Medical Record of New York.)

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

டாக்டர் V. மஹாதேவன், I. M. S.

சென்னை மாகாணத்திலிருந்து L. M. &. S. பரீக்ஷையில் தேறி அஸிஸ்டெண்டு ஸர்ஜனாயிருந்த டாக்டர் V. மஹாதேவன் இங்கிலாந்துக்குச் சென்று, எடின்பரோவில் இந்தியன் மெடிகல் ஸெர்வீஸுக்காகப்படித்துக் கொண்டிருந்து, சென்ற டிசம்பர் மாதத்தில் அந்த I. M. S. பரீக்ஷையிலும் தேறினர். இப்பொழுது கவர்ன்மெண்டார் அவரை இந்தியன் மெடிகல் ஸெர்வீஸுக்குத் தெரிந்தெடுத்திருப்பதாய் அறிந்து நாம் ஸந்தோஷப்படுகிறோம்.

இரத்தாசயரோகமும் உழைப்பின்மையும்.

ஹ்ருதயம் என்கிற இரத்தாசயத்தைப்பற்றிய வியாதிகளைச் சிகித்ஸை செய்வதில், உடம்பு சிறிதும் அசையாவண்ணம் பிணியாளி முற்றிலும் ஒழிவெடுத்துக் கொள்வது மிகவும் இன்றியமையாத விஷயம். இதற்காக முதலில் ஊக்கமும் கவலையும் வைத்தியனுடைய மனதில் விசேஷமாகப் பதியவேண்டும். தத்துவமறிந்த வைத்தியனுக்குள்ள அவ்விதமான ஊக்கத்தையும் கவலையையும் கண்டு சிறிதும் அசைவின்றி ஒய்வெடுத்து[illegible]ள்வதில் ரோகிக்கும் மனதில் சிரத்தை மேலி[illegible]ருதயத்தைப்பற்றிய பெரும்பான்மையான [illegible]களில் சிரமபரிஹாரமே ஒப்புயர்வற்ற சிகித்[illegible]முறை யென்பதிலும், அந்த ரோகங்களில் ஔஷத ப்ரயோகங்கள் இரண்டாவது விஷயமாய் கவனிக்க வேண்டியவைகள் என்பதிலும் சிறிதும் ஸந்தேஹமில்லை. சுகமாய் ஒய்வெடுத்துக் கொள்வதால் ஹ்ருதய ரோகங்கள் தானாகவே குணமாய் விடுகின்றன என்று வைத்திய நிபுணர்களால் பல ஸமயங்களிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. (டாக்டர்-The Doctor)

BOOK REVIEWS.

புஸ்தக ஆராய்ச்சி.

ப்ரத்யக்ஷ சாரீரம் (Human Anatomy in Sanskrit):—எமது பார்வைக்கு இப்பெயர் கொண்ட ஸம்ஸ்கிருதக்கிரந்தம் ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் பண்டைக்காலத்திய ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டுள்ள சரீரதத்துவங்களைப் ப்ரத்யக்ஷமான அனுபவங்களுக்கு இணங்க பற்பல [illegible]சோதனை செய்து சீர்திருத்தி ஆயுர்வேத வைத்தியர்களுக்கு விசேஷமான அறிவைப் புகட்டவேண்டுமென்று இந்நூல் இயற்றப்பட்டிருக்கிறது. வைத்தியாவதம்ஸ, வித்தியாநிதி, கவிபூஷண என்கிற பட்டப்பெயர்களுடன் விளங்கும் எமது நண்பரான கவிராஜ ஸ்ரீ கணநாதஸேன், M. A; L. M. &. S. என்கிற பண்டிதரால் இந்நூல் இயற்றப்பட்டதாகும். இவர் வயதில் வெகு சிறியவர். ஆனால் இவருக்குள்ள அறிவு அபரிமிதம். இங்கிலீஷில் மிக வியாபகராயிருப்பதுடன், ஸம்ஸ்கிருதத்தில் இவருக்குள்ள பயிற்சியானது பெரிதும் புகழக்கூடியது. இந்த "ப்ரத்யக்ஷ சாரீரம்" என்கிற ஸம்ஸ்கிருத சரீரதத்துவநூலில் அவர் பிரயோகித்திருக்கிற வாக்கிய நடையானது எமக்கு இவ்வளவு தான் வியப்பைத் தருகிறதென்று சொல்வதற்கில்லை. இப்பொழுது எமக்கு அனுப்பப்பட்டிருப்பது முதற்பாகமாகும். இந்த முதற்பாகத்தில் சரீரத்திலடங்கிய அஸ்திகள், அவற்றின் ஸந்திகள், அந்த ஸந்திகளைக்கட்டுவதற்கேற்பட்ட நார்களான ஸ்நாயுக்கள் (Ligaments) இவற்றின் தத்துவங்கள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இவ்விஷயங்களை விவரிப்பதற்கு ஒவ்வோரிடத்திலும் அனேகம் சித்திரப்படங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சரீரதத்துவ ஸம்பந்தமாய் பிராசீன ஸம்ஸ்கிருதக் கிரந்தங்களில் வழங்கப்பட்டுள்ள பரிபாஷைகளையே பெரும்பாலும் அனுஸரித்து விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், மத்திய காலத்தில் சரீரதத்துவம் முதலியவற்றில் பயிற்சி பெறாத சில ஸங்கிரஹக்கிரந்தமியற்றிய வைத்தியர்களால் ஆயுர்வேத ஸம்பந்தமான சரீரதத்துவநூல்களில் முன்பின் தவறாகவும், ப்ரத்யக்ஷானுபவத்திற்கு இணங்காமலும் சிற்சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்க, அவைகளையெல்லாம் ஒவ்வோரிடத்திலும் சீர்திருத்தி, ப்ரத்யக்ஷப்பிரமாணத்தையும் சாஸ்திரார்த்தங்களையும் ஒற்றுமைப்படுத்தி விஷயங்களை விளக்குவதில் இவர் வெகுப்பிரயாஸம் எடுத்துக் கொண்டிருக்கிறார். விசேஷார்த்தங்களைக் கூறவேண்டிய இடங்களிலும், சிக்கான விஷயங்கள் எழுதப்படுமிடங்களிலும் நூலாசிரியரே ஆங்காங்கு விவரமாக டிப்பணியையும் எழுதியிருக்கிறார். இங்கிலீஷிலுள்ள சரீரதத்துவநூல்களைப் பார்த்து இந்தக் கிரந்தம் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அவருக்குண்டான விசேஷ சாஸ்திரப்பயிற்

சியின் மேல் அவருடைய சுயமான ஸாமர்த்தியத்தைக் கொண்டே இந்நூல் இயற்றப்பட்டிருப்பதை நோக்கி நாம் மிகவும் ஸந்தோஷப்படுகிறோம். இந்த நூலுக்கு ஆங்கிலத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் வெகு விசாலமான முகவுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. முகவுரைகளில், ஸம்ஸ்கிருதத்திலுள்ள பிராசீன வைத்திய நூல்களின் வரிசைகளும், அவற்றை இயற்றியமஹான்களும், அவர்களுடைய காலங்களும், ஆர்ய வைத்திய சாஸ்திரங்கள் முதலில் அபிவிருத்தியான மாதிரிகளும், மத்தியில் அவற்றிற்குண்டான மாறுபாடுகளும் இவ்விவிதமென்று வெகு திறமையுடன் விசாரம் செய்யப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும் முகவுரைகள் மட்டும் விசாலமான காகிதங்களில் 100 பக்கம் வரையில் அச்சிடப்பட்டிருக்கின்றனவென்றால் எவ்வளவு விசேஷமாக விசாரம் செய்யப்பட்டிருக்குமென்று இதைப்படிப்பவரே யோசிக்கக்கூடும். ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியரும் அவசியம் இப்புஸ்தகத்தைப் படிக்கவேண்டும். இதைப் படிப்பதால் சரீரதத்துவங்களைக் கண்ணாடியில் பார்ப்பது போல் நன்றாக அறியலாம். ஆயுர்வேத ஸம்பந்தமான சரீரதத்துவ நூல்களிலுள்ள ஸந்தேஹாஸ்பதமான விஷயங்களிலெல்லாம் இப்புஸ்தகத்தைப் படித்த பிறகு மிகவும் தெளிவுண்டாகும். இவ்விதம் மஹாசிரேஷ்டமான நூலை ஸம்ஸ்கிருதத்தில் இயற்றி வெளியிடுவதற்கு பெருமுயற்சி யெடுத்துக்கொண்டதற்காக ஸ்ரீ கணநாத ஸேன் அவர்களிடம் ஆயுர்வேத வைத்தியர்கள் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர். நல்ல கனமான காகிதத்தில் வெகு அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாகத்திற்கும் விலை ரூபாய் 5. மூன்று பாகங்களில் புஸ்தகம் முடிவு பெறுமென்று தெரியவருகிறது. ரோக நிதானங்களைப்பற்றி "ஸித்தாந்த நிதானம்" என்கிற ஒரு சிலாக்கியமானக் கிரந்தமும் இவர்களால் எழுதப்பட்டு சித்திரங்களுடன் வெளியிடப்படுகிறது. அதன் ஆதர்ச பத்திரம் (Specimen Pages) சிலது எமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. Viswanath Niketan Dispensary, 65-Beadon St., Calcutta என்கிற இடத்திற்கு எழுதினால் புஸ்தகம் கிடைக்கும்.

ஆயுர்வேதீய க்ரந்தமாலா.

பம்பாயில் ஸ்ரீ வைத்திய ஜாதவ்ஜீ த்ரிகம்ஜீ ஆசார்யர் என்பவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள பிராசீன ஆயுர்வேதக்கிரந்தங்களை யெல்லாம் ஸம்பாதித்து அவைகளைப் பரிசோதித்து மாதந்தோறும் ஸஞ்சிகைகளாக தேவநாகரத்தில் அச்சிட்டுப் பிரசுரம் செய்துவருகிறார். அவர் இவ்விதமான பெரிய காரியத்தை ஆயுர்வேத வைத்தியர்களுடைய நன்மையையும், ஆர்யவைத்திய சாஸ்திரத்தில் அவருக்குள்ள அபிமானத்தையும் முன்னிட்டு நிறைவேற்ற முயன்று மூன்று வருஷகாலமாய் விசேஷமாகத் திரவியங்களைச் செலவழித்து, புத்தி சிரமத்தையும் சரீர சிரமத்தையும் பாராட்டாமல், வெகு ஊக்கத்துடன் வேலை செய்து வருகிறார். ஏதோ சில ஆயுர்வேதக் கிரந்தங்கள் மட்டும் பிறரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனவே யன்றி, எண்ணிறந்த ஸம்ஸ்கிருத வைத்திய நூல்கள் வெளிவராமல் ஆங்காங்கு மூலைகளில் பதுங்கிக்கிடந்தும் பதனழிந்தும் வருகின்றன. அவ்விதம் ஆயுர்வேத நூல்கள் அனியாயமாய் அழியாமலிருப்பதற்காக எமது மித்திரர் த்ரிகம்ஜீ ஆசாரியர் எடுத்துக்கொண்ட இவ்வித பெருமுயற்சிக்காக நாம் அவரை மனதார வாழ்த்துகின்றோம். பிராசீன கையெழுத்துப் பிரதிகளிலுள்ள நூல்களை சேகரிப்பதிலும், அவற்றை நன்கு பரிசோதித்துப் பிரசுரிப்பதிலும் மிகவும் சிரமம் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாக நாம் அறிவோம். ஸம்ஸ்கிருத பாஷையிலும் வைத்திய சாஸ்திரத்திலும் த்ரிகம்ஜீ அவர்களுக்கு சிறந்த பயிற்சியுண்டு; அவர் 'ஆயுர்வேதீய க்ரந்தமாலா' என்கிற மாதாந்தர ஸஞ்சிகை மூலமாக இது வரையில் 12-கிரந்தங்கள் வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொரு நூலும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மிகவும் உபயோகமானது. உயர்ந்த காகிதத்தில் மஹாபிரஸித்தமான நிர்ணயஸாகர பிரஸ்ஸில் அச்சிடப்பட்டிருக்கிற இந்த கிரந்தமாலா ஸம்பந்தமான ஒவ்வொ நூலையும் பற்றி அடுத்த முறை விசாரம் செய்வோம். இதற்கு வருஷசந்தா தபாற்செலவு உட்பட ரூபாய் 3. Vaidya jadavji Trikamij Acharya 373, Bora Bazar St,. Bombay. என்கிற விலாஸத்திற்கு எழுதிக்கொண்டால் ஆயுர்வேதியக்ரந்தமாலை கிடைக்கும்.

சரீர சாஸ்திரம்.

சென்னையில் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்ட் [illegible]ஸ்பெக்டராயிருக்கும் மிஸ்டர் N. ஸ்வாமிநா[illegible]ய வரால் சரீரதத்துவத்தைப்பற்றி மேற்கூறி[illegible]யர் கொண்ட ஒரு சிறு புஸ்தகம் தமிழில் எழுதப்பட்டு வெளியாயிருக்கிறது. சரீரத்திலுள்ள அவயவங்களின் அமைப்புகளைப்பற்றியும், அவற்றின் செயல்களைப்பற்றியும் அவசியமாயுள்ள தத்துவாம்சங்கள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. இதில் கூறியுள்ள விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டுவதற்காக அநேக சித்திரப்படங்களும் அச்சிடப்பட்டுள. ஒவ்வொரு மனிதனுக்கும் தனது சரீர அமைப்பைப்பற்றி ஆழ்ந்த அறிவு இல்லாமற் போனாலும், இவ்விஷயத்தைப்பற்றி ஒருவாறு ஸாதாரணமாகவாவது அறிந்திருப்பது இன்றியமையாததாகும். சரீரதத்துவத்தைப் பற்றிய அவ்விதமான அறிவைப் புகட்டுவதற்கு இந்த நூல் எவ்விதத்திலும் ஏற்றதாயிருக்கின்றது; ஆகையால் பொது ஜனங்களும், விசேஷமாய் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களும் இப்புஸ்தகத்தைப் படித்து தமது அறிவை விசாலப்படுத்திக் கொள்ளலாம். விஷயங்களை யெல்லாம் ஸ்வல்பமான நடையில் எளிதில் அறியக்கூடியவாறு விளக்கியிருப்பதே இதில் விசேஷம். இதன் விலை 8 அணா. வேண்டியவர் மேற்படி இன்ஸ்பெக்டருக்கு எழுதிக்கொள்ளலாம்.